# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4 தேசம்: 1 திருவள்ளுவர் ஆண்டு 2053 தை / ஜனவரி 2022 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


*தேசத்தின் குரல்*

## ஆர்எஸ்எஸ் ஆளுநர் ஆர்.என். ரவிக்கும், ஆளுநர் பதவிக்கும் விடைதரும் நேரம்!




மருத்துவக் கல்விக்கான 'நீட்' என்னும் நாடளாவிய தகுதிகாண் மற்றும் நுழைவுத் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழக மக்களின் பொதுக் கோரிக்கையாகும். பாசக தவிர நீட்டை ஆதரிக்க யாருமில்லை என்பதே உண்மை. ஆனால், சட்டப் பேரவையில் ஒருமனதாக இயற்றப்பட்ட நீட் விலக்குச் சட்ட

## உள்ளே...


1. தேசத்தின் குரல் - 1
2. செங்காட்டான் குறிப்புகள் - 5
3. சமத்துவமின்மையின் உச்சத்தில் இந்தியா - 8
4. வரிப் புகலிடம் (Tax Haven) என்றால் என்ன? - 23
5. வரிப் புகலிடங்கள் எங்கே அமைந்துள்ளன? - 29
6. ஐக்கிய முடியரசின் சிலந்தி வலை - 31
7. நிதிக் கமுக்கம் - 35
8. வரிப் புகலிடங்கள் ஊழலை எவ்வாறு தூண்டுகின்றன?-39



பதிவு எண் :R.Dis. No. 1964/2014

**முன்வடிவை அரசமைப்புச் சட்ட வழிமுறையின் படி குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் காலங்கடத்தி வருகிறார் ஆர் எஸ் எஸ் ஆளுநர் ஆர்.என். ரவி. சட்டப் பேரவை முடிவை மதித்து நடக்குமாறு அனைத்துக் கட்சிக் கூட்டமும் வலியுறுத்தியுள்ளது.**

**அனிதா தொடங்கி 16 மாணவச் செல்வங்களின் உயிரைப் பறித்த நீட் கொடுமைக்கு முடிவு கட்ட முடியாமல் தமிழ்த் தேசம் தவித்து நிற்கிறது. உயிரிழப்புகள் ஒருபுறம் இருக்க, தமிழ்நாட்டில் ஒப்பளவில் சிறப்பாக இயங்கி வரும் மருத்துவக் கல்வி முறைமையையும் மருத்துவக் கட்டமைப்பையும் நீட் அரித்துக் கொண்டிருக்கிறது. சமூக நீதிக்கு விழுந்துள்ள அடி மருத்துவக் கல்வியோடு நிற்கப் போவதில்லை என்ற அச்சுறுதலும் ஓங்கி நிற்கிறது.**

**தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தல் முடிவைத் தீர்மானிப்பதில் 'நீட்'டுக்கும் பங்கிருந்தது என்பதே உண்மை. "ஆட்சிக்கு வந்தால் உடனே நீட்டை நீக்கி விடுவோம்" என்று திமுக தந்த தேர்தல் வாக்குறுதி அடிப்படையற்ற ஒன்றுதான். ஆனால் திமுக ஆட்சிக்கு வந்தவுடன் நீதியர் இராஜன் தலைமையில் 8 உறுப்பினர் குழு அமைக்கப்பட்டது. நீட்டின் கேடுகளைப் பயிலவும், மாணவர் சேர்க்கைக்கு மாற்று வழிமுறைகளைப் பரிந்துரைக்கவும் அமைக்கப்பட்ட இக்குழு விரிவாக அனைத்துக் கூறுகளையும் ஆய்வு செய்து 86,000த்துக்கு மேற்பட்ட கருத்துகளைப் பெற்றுப் பதிவு செய்துள்ளது. பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் கருத்துரைத்துள்ளனர். குழு பலமுறை கூடி ஆய்வுசெய்து, 34 நாளில் 165 பக்க அறிக்கையை இறுதி செய்து முதலமைச்சர் ஸ்டாலினிடம் கையளித்தது. நீட் எப்படியெல்லாம் ஊர்ப்புற மாணவர்களையும் நகர்ப்புற மாணவர்களையும் தாக்குகிறது, எப்படியெல்லாம் அரசுப் பள்ளி மாணவர்களைத் தாக்குகிறது என்பதையெல்லாம் சான்றுகளுடன் எடுத்துக் காட்டும் இராஜன் குழு அறிக்கை… பயிற்சி மையங்களில் பணங்கட்டிப் பயிற்சி பெற முடிந்தவர்களுக்குள்ள வாய்ப்புகள், ஏழைப் பெற்றோர் படும் துன்பங்கள் அனைத்தையும் பட்டியலிடுகிறது. தனியார் மருத்துவக் கல்லூரிகள் தங்களிடம் சிக்கும் தன்னிதிப் பிரிவு**

**மாணவர்களிடம் தண்டும் கொள்ளைக் கட்டணங்கள் சமூக நீதிக்கு ஏற்படுத்தும் கொடுங்காயங்களை இராஜன் குழு கண்டு கொள்ள வில்லை என்பது சமூக நீதி ஆர்வலர்கள் சிலரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் நீட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு தேவை என்ற பரிந்துரை வலுமிக்கது.**

**இந்த வலுவான அடிப்படை மீதுதான் சென்ற செப்டெம்பர் திங்களே தமிழ்நாடு சட்டப்பேரவை நீட் விலக்கிற்கான சட்ட முன்வடிவை இயற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்தது. ஆளுநரின் அரசமைப்பியல் கடமை இந்தச் சட்டமுடிவைக் ”கூடுமான விரைவில்” (அரசமைப்பு சட்டம் பயன்படுத்தும் தொடர்) குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைப்பதுதான். கிண்டி ராஜ் பவனில் குடிகொண்டிருக்கும் குட்டிப் பேய் தில்லி ராஷ்டிரபதி பவனில் குடிகொண்டிருக்கும் பெரும்பேய்க்கு அனுப்ப வேண்டும். அந்தப் பெரும்பேய் என்ன செய்யுமோ?**

**மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைப்பது நீட்! 12 ஆண்டு பள்ளிக் கல்வியைப் பொருளற்றதாக்குவது நீட்! மாநில அரசு நடத்தும் மருத்துவக் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கை உரிமையைப் பறித்துக் கொண்டது நீட்!**

**நீட் விலக்குச் சட்ட முன்வடிவை மேலனுப்பாமல், அதன் மீது வேறெந்த முடிவும் எடுக்காமல், அமுத்தலான வாய்மூடலுடன் கோப்பின் மேல் ஏறி அமர்ந்து ஆறுகால பூசை செய்து கொண்டிருக்கிறார் ஆர்என் ரவி. இத்தனைக்கும் முதலமைச்சர் நேரில் சந்தித்து நினைவூட்டவும் செய்தார். இது குறித்து தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்துறை அமைச்சரைச் சந்திக்க விரும்பிய போது அவர் நேரம் கொடுக்கவே மறுத்து விட்டார்.**

**தமிழக மக்களின் உணர்வுகளை ஆளுநரும் அவரை ஆட்டிப் படைக்கும் மோதி**

**வகையறாக்களும் மதிக்கவில்லை, அவர்களை இழிவு செய்யவும் தயங்கவில்லை. இது கல்வியில் சமூகநீதி தொடர்பான சிக்கல் மட்டுமன்று, தமிழ்மக்களின் இனமானச் சிக்கலுமாகும்.**

**"நாங்கள் தில்லி ஆண்டைகள், தமிழர்களாகிய நீங்கள் எங்களுக்கு அடிமைகள்" என்பதைத்தான் ஆர்என் ரவி வழியாக மோதி வகையறாக்கள் நமக்குச் சொல்லாமல் சொல்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற சட்டப் பேரவை, மக்களாட்சி முறையிலான அமைச்சரவையும் முதலமைச்சரும், மக்களின் தேவை, மக்களின் ஆழ்ந்த உணர்வுகள்… எது பற்றியும் கவலை இல்லாமல் சென்னையிலும் ஊட்டியிலும் நம் செலவில் உல்லாச வாழ்க்கை, ராஜ் பவனையே ஆர்எஸ்எஸ் அலுவலகமாக்கி, அவ்வப்போது சிறிராமனைத் தொழுதிடும் மத வெறி அறிக்கைகள்… இந்த ஆர் என் ரவி அடிக்கும் கூத்துக்கு அளவே இல்லை!**

**இந்த அடாவடி ஆளுநரை வெளியேற்றும் நேரம் வந்து விட்டது. ஆட்டுக்கு ஏன் தாடி என்று பேசிக் கொண்டிருந்தால் போதாது. தமிழ்நாட்டுக்கு ஆளுநர் தேவையில்லை என்ற முடிவையையும் எடுக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு அந்தத் திறன் உண்டு என்று நம்புகிறோம்! கிண்டியில் 156 ஏக்கர் பரப்பளவில் 6,000 மரங்கள், செடிகொடிகள், மான்கள், மற்ற எல்லாவற்றோடும், ஆள் படை மாகாணம் அனைத்தோடும் விரிந்து பரந்து அலங்கமாய்க் கிடக்கும் ராஜ் பவன் மாளிகையை வேறு நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். முதலில் இந்தப் பேயை விரட்டுவோம்!**

# செங்காட்டான் குறிப்புகள்

## 1) ஈஷா மோசடிகள்

**கர்நாடகத்தைச் சேர்ந்த ஜக்கி வாசுதேவின் ஈஷா அறக்கட்டளை கோவையில் வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் செயல்பட்டு வருகிறது. ஈஷா மைய வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள தியான லிங்கம் கோயிலும் ஆதியோகி என்ற பெயரிலான சிவன் சிலையும் ஏராளமான இறையன்பர்களை ஈர்த்து வருகின்றன. இந்தக் கோயிலும் சிலையும் சைவ நெறிகளுக்கும் ஆகம விதிகளுக்கும் புறம்பாக அமைதிருப்பதாக ஒரு சாரார் கூறி வருகின்றனர் என்றாலும் அது பற்றியதன்று நம் கவலை. ஈஷா யோக மையம் வனப் பகுதியை வன்கவர்வு செய்து அமைக்கப்பட்டுள்ளது என்பது தொடர்ந்து சொல்லப்பட்டு வரும் குற்றச்சாற்று. அது யானைகளின் வலசைப் பாதையில் அமைந்துள்ளது என்று 2011-12ஆம் ஆண்டிலேயே கோவை மாவட்ட வன அலுவலர் எழுதினார். ஆனால் 17.09.2021 அன்று தகவலுரிமைச் சட்டப்படியான விடையில் மாவட்ட வன அலுவலர் இதற்கு மாறான தகவல் தந்துள்ளார். யோக மையம் யானையின் வழித்தடத்தில் அமையவில்லையாம்! இந்தியத் தலமையமைச்சர் ஆனானப்பட்ட நரேந்திர மோதியின் ஆதரவு பெற்றவரல்லவா ஜக்கி?**

**ஆதியோகி சிலையும், அதையொட்டி நிறுவப்பட்ட பல்வேறு கட்டடங்களும் சட்டத்திற்குப் புறம்பான கட்டுமானங்கள் என்பதைத் தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதை 2017ஆம் ஆண்டில் இந்திய அரசின் தலைமைத் தணிக்கை அதிகாரியின் அறிக்கையே சுட்டிக்காட்டிற்று..**

**வனப்பகுதிக்கு மிக அருகிலேயே கட்டடங்கள் கட்டியது, நிதி மோசடியில் ஈடுபட்டது, பழங்குடியினரின் நிலத்தை பறித்துக் கொண்டது எனத் தொடர்ந்து பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டு வரும் ஈஷா மையம் அறக்கட்டளையை தமிழ்நாடு அரசு ஏற்று இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்பது குடியாட்சிய ஆற்றல்களின் கோரிக்கை.**

### 2) வெறுப்புமிழ்ந்த ”தர்ம சன்சத்”

**உத்தர்காண்ட் மாநிலம் அரித்துவாரில் தர்ம சன்சத் என்ற பெயரில் நடந்த திசம்பர் 17-19 மூன்று நாள் கூட்டத்தில் இந்து மத வெறியும் இஸ்லாமியருக்கு எதிரான வெறுப்பும் விதைக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் இல்லாத இந்தியாவை உண்டாக்க ’தர்ம சன்சத்’ சூளுரைத்துள்ளது. எப்படி? முஸ்லிம்களை இனக்கொலை செய்ய வேண்டுமாம்! இதற்காக இந்துக்கள் படை அமைக்க வேண்டுமாம்!**

**கொலைவெறியோடு கொக்கரித்தவர்களில் ஒருவர் அஷ்வின் உபாத்யாய்! இவர் மீது பல வழக்குகள் உள்ளன. மாநில அரசும் காவல்துறையும் இந்த வெறுப்புக் கூச்சலைக் கண்டு கொள்ளவே இல்லை. ஒப்புக்குச் சில நடவடிக்கைகள் வரலாம். ஆனால் அதைக் கண்டு ஏமாந்து விடக் கூடாது. இந்த வெறித்தனமான வெறுப்புமிழ்வை நாட்டின் தலைமையமைச்சரோ உள்துறை அமைச்சரோ ஒப்புக்குக் கூட கண்டிக்கவில்லை. இந்துத்துவ சூத்திரதாரிகள் ஆயிற்றே!**

### 3) காசுமீரத்தில் தொடரும் நரவேட்டை:

**2019 ஆகஸ்டு 5ஆம் நாள் இந்திய நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பை யாரும் மறந்திருக்க முடியாது. தீராத காசுமீரச் சிக்கலை இந்த அறிவிப்பின் மூலம் தீர்த்து விட்டதாக அவர் கூறிக் கொண்டார். அரசமைப்புச் சட்டத்தின் 370ஆம் உறுப்பை முடக்குவதும், ஜம்மு காசுமீர மாநிலத்தைக் கலைத்து விட்டு, ஜம்மு காசுமீர், லடாக் என்ற இரு ஒன்றிய ஆட்சிப்புலங்களை உருவாக்குவதும்தான் அந்த அறிவிப்பு. இந்த அறிவிப்புக்குப் பின் காசுமீரப் பள்ளத்தாக்கு முழுவதும் முழுமையான ஊரடங்கு செயலாக்கப்பட்டது. தலைவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். இணையம் துண்டிக்கப்பட்டது. சிக்கலைத் தீர்த்து விட்டோம், திகிலியம் (பயங்கரவாதம்) ஒழிந்தது என்று அமித் ஷா மார்தட்டிக் கொண்டார்.**

ஆனால் காசுமீரத்திலிருந்து அன்றாடம் கிடைக்கும் செய்திகள் கலக்கம் தருகின்றன. 27 நாளில் 26 பொய் மோதல்-கொலைகள் நடந்துள்ளன. இறந்தவர்களில் பெரும்பாலார் அகவை இருபது கூட நிறையாத பதின்பருவ இளம்பிள்ளைகள். காசுமீரத்தின் இப்போதைய மக்கள்தொகை ஒன்றேகால் கோடி. ஆய்தப் படையினரின் தொகை 9 இலட்சம். உலகிலேயே இதுதான் ஆகப் பெரும் இராணுவ அடர்த்தி என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

டிசம்பர் 30 செய்திப்படி ஹைதர்போரா என்கவுண்டரில் பலியானவர்களின் உறவினர்கள்… அரசு விசாரணைக் குழு அறிக்கை வெறும் கண்துடைப்பு என்று கூறி ஆர்ப்பாட்டம் செய்தனர்! இது பொய்மோதல்தான் என்று பாசக ஆதரவுக் கட்சிகளே குற்றஞ்சாற்றியுள்ளன. 2020 டிசம்பர் 30ஆம் நாள் நடந்த பொய்மோதலில் கொலை செய்யப்பட்ட ஏதர் முஷ்டாக்(17), அஜாஸ் முகமது (24), ஜுபேர் அகமது லோன் (22) ஆகிய மூன்று இளைஞர்களின் பெற்றோர்… எங்களுக்கு நியாயமான நீதி விசாரணை வேண்டும், காவல்துறையால் கொலை செய்யப்பட்ட எங்கள் பிள்ளைகளின் உடல்களை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று போராடுகின்றனர். கொல்லப்பட்டவர்கள் திகிலியர்கள் என்று காவல்துறை சொல்வதை யாரும் ஏற்கவில்லை…

காசுமீரிகள் முசுலிம்கள், அவர்கள் பாகிஸ்தானின் கையாட்கள், எனவே நம் பகைவர்கள் என்ற வெறித்தனம் இந்திய ஆய்தப்படைகளிடம் ஊட்டி வளர்க்கப்படுகிறது. எத்தனைக் கொலைகள் செய்தாலும் அத்தனைப் பரிசுகள், வீர விருதுகள்! முப்படைத் தளபதியாக மோதி விரும்பித் தேர்ந்தெடுத்த பிபின் ராவத் இந்த அணுகுமுறையைத்தான் வலிந்துரைத்தார்.

இராணுவம் களத்தில் நிற்கும் போது அதற்கொரு பகை இராணுவம் இருக்கும். காசுமீரத்தில் காசுமீர மக்களே இந்திய இராணுவத்துக்குப் பகை இராணுவமாகப் பார்க்கப்படுகிறார்கள் என்பதுதான் உண்மை.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்! ஆகுமா?

# சமத்துவமின்மையின் உச்சத்தில் இந்தியா

சமந்தா



ஒமைக்ரான் அபாயத்திலிருந்து காப்புப் பெற கோவிட்-19 தடுப்பு ஊக்கி மருந்து பரவலாகப் போட்டுக் கொள்ளவேண்டும் எனப் பரிந்துரைக்கப்படும் வேளையில், ஜனவரி முதல் நாள் நிலவரப்படி இந்தியாவில் கோவிட்-19 தடுப்பு மருந்து இருமுறை போட்டுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 24.8 விழுக்காடாகவும், கோவிட்-19 தடுப்பு மருந்து ஒரு முறை போட்டுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 54.9 விழுக்காடாகவும் உள்ளது.

2021இல் நிலவிய குறைந்த வட்டி விகிதத்தாலும், ஏராளமான பணப் புழக்கத்தாலும் உண்மையான பொருளாதாரம் வளர்ச்சியடையவில்லை, நவீன தாராளமயம் ஊக முதலீடுகளால் பங்குச் சந்தைகளையே ஊதிப் பெருகச் செய்துள்ளது. பெரும் எண்ணிக்கையில் புதிய

முதலீட்டாளர்களைப் பங்குச் சந்தை ஈர்த்துள்ளது. உத்வேகம் பெற்ற காளைச் சந்தை எனப்படும் பங்குச்சந்தையில் அதிக எண்ணிக்கையில் சில்லறை முதலீட்டாளர்கள் முதலீடு செய்துள்ளனர். 2021ஆம் ஆண்டில் இந்தியாவின் முதன்மைச் சந்தையிலிருந்து நிறுவனங்கள் ₹1.18 லட்சம் கோடி நிதி திரட்டியுள்ளன.

மார்ச் 2020க்குப் பிறகு ஆரம்பித்த பங்குச் சந்தை உயர்வு, 2021இல் உச்சம் தொட்டது. இந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரை இந்தியாவில் 2.744 கோடி புதிய 'டிமேட் கணக்குகள்' உருவாக்கப்பட்டுள்ளன. டிமேட் கணக்கு என்பது பங்குகளைச் சேமிப்பதற்கான கணக்கு. இந்த ஆண்டில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் முறையே 32.4 இலட்சம் மற்றும் 36.3 இலட்சம் புதிய டிமேட் கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன. 2020ஆம் ஆண்டில் 1.050 கோடி டிமேட் கணக்குகள் உருவாக்கப்பட்டன. நிதிமயமாக்கத்தின் விளைவாகப் பங்குச் சந்தைகளில் சில்லறை முதலீட்டாளர்களின் பங்கு பெருகத் தொடங்கியுள்ளது.

2019இல் 3.930 கோடியாக இருந்த இந்தியாவின் மொத்த டிமேட் கணக்குகளின் எண்ணிக்கை 2020 இன் இறுதியில் 4.980 கோடியாகவும், 2021 நவம்பர் மாத நிலவரப்படி 7.724 கோடியாகவும் உயர்ந்துள்ளது.

கோவிட் தொற்றுநோய்க்கு முன்பு இந்திய பங்குச்சந்தை முதலீடுகள் ஆண்டுக்கு 10-15% என்ற விகிதத்தில் வளர்ந்து வந்தன. கோவிட்-19க்குப் பிறகு 30-50% என்ற விகிதத்தில் வளர்ந்து வருகின்றன. 'க்ரோ' முதலீட்டுத் தளத்தில், மொத்த முதலீட்டாளர்களில் கிட்டத்தட்ட 76 விழுக்காட்டினர் முதல் முறை முதலீட்டாளர்கள் என அதன் தலைவர் ஹர்ஷ் ஜெயின் தெரிவித்துள்ளார்.

2021இல் மார்கன் ஸ்டான்லி சர்வதேச முதலீட்டு (MSCI) அமைப்பினது மதிப்பீட்டின் படி இந்தியா உட்பட வளர்ந்து வரும் சந்தைகளின் பங்குச் சந்தைக் குறியீட்டில் 5% இழப்பு ஏற்பட்டுள்ளது, அதனுடன் ஒப்பிடும் போது இந்தியப் பங்குச் சந்தைகளான சென்செக்ஸ் மற்றும் நிஃப்டி 20%க்கும் அதிகமாக உயர்ந்துள்ளன, அதே நேரத்தில் உலக அளவிலான பங்குச் சந்தைக் குறியீடு 19% உயர்ந்துள்ளது.

ஒரு பில்லியன் டாலர், அதாவது 100 கோடி டாலர்களுக்கு மேல் மதிப்புக் கொண்டிருக்கும் தொடக்க நிறுவனங்கள் யுனிகார்ன் என அழைக்கப்படுகின்றன. இந்தியாவில் 2020இல் இருந்ததை விடக் கூடுதலாக 33 யுனிகார்ன்கள் வளர்ந்துள்ளன. 54 யுனிகார்ன் தொடக்க நிறுவனங்களுடன் பிரிட்டனை முந்திக் கொண்டு இந்தியா மூன்றாம் இடத்தில் உள்ளது. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக ஏற்றம் பெறும் பங்குச் சந்தையால் இந்தியாவில் பில்லியனர் நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 1 பில்லியன் டாலர் (சுமார் ரூ. 7,500 கோடி) மதிப்பை ஈட்டிய முதலீட்டாளர்களின் எண்ணிக்கை, 2020 முடிவில் 85 ஆக இருந்து 126ஆக உயர்ந்துள்ளது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் $483 பில்லியன் (சுமார் ரூ. 35.3 டிரில்லியன்) ஆக இருந்த இவர்களின் மொத்த சொத்து மதிப்பு சுமார் $728 பில்லியன் (சுமார் ரூ. 54.6 டிரில்லியன்) டாலராக உயர்ந்துள்ளது. இவையே இந்தியாவின் சாதனைகளாகப் போற்றப்படுகின்றன.

இது வரை பொருளாதாரத்தைத் தூண்டுவதற்காகச் செயல்படுத்தப்பட்ட மலிவுப் பணக் கொள்கையால் பண வழங்கல் எக்கச்சக்கமாக உயர்த்தப்பட்டது. கடந்த மாதங்களில் உயரும் பணவீக்கம் பற்றிக் கருத்து தெரிவித்த போது அது ஒரு தற்காலிக நிகழ்வே, விரைவில் பணவீக்கம் தணிந்து விடும் என அமெரிக்க மத்திய வங்கியின் தலைவர் ஜெரோமி பவல் கருத்துத் தெரிவித்தார். விரைவில் நிதிப் பத்திரங்கள் வாங்கிப் பணப் புழக்கத்தை உயர்த்தும் செயல்முறை குறைக்கப்படும் என்றும் கூறப்பட்டது. மத்திய வங்கியின் வட்டிவீதம் இதுவரை உயர்த்தப்படவில்லை என்ற போதும் விரைவில் உயர்த்தப்படுவதற்கான வாய்ப்புகளே அதிகம். இதனால் வளரும் நாடுகளின் பங்குச் சந்தைகளிலிருந்து அந்நிய முதலீட்டாளர்கள் பெருமளவில் வெளியேற ஆரம்பித்துள்ளனர். இது நாடுகளின் நிதிச் சமநிலையில் கடுமையான இறக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக வளரும் நாடுகளின் நாணயங்களுக்கான தேவை குறைவதாலும் டாலருக்கான தேவை அதிகரிப்பதாலும், டாலர் மதிப்பேற்றம் பெற்றுவருகிறது, வளரும் நாடுகளின் நாணயங்கள் மதிப்பிழந்து வருகின்றன. இந்திய ரூபாயும் மதிப்பிழந்துள்ளது. ரூபாயின் நிலையான சரிவு பங்குச் சந்தையில் மேலும் சரிவை ஏற்படுத்தும். பாகிஸ்தானிய ரூபாய் கடுமையாக மதிப்பிழந்து சர்வதேசப் பண நிதியத்தின் உதவியை நாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பண மதிப்பிழப்பால் இறக்குமதிக் கட்டணங்கள் உயர்ந்து, வர்த்தகப் பற்றாக்குறையும், நடப்புக் கணக்குப் பற்றாக்குறையும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவின் மத்திய வங்கியின் அந்நியச் செலவாணி இருப்புகளும்

குறைந்துள்ளன. ஆனால் இவற்றை எல்லாம் கருதிப் பார்க்காத நிதியமைச்சகம் இந்தியப் பொருளாதாரம் சிறப்பானதொரு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதாகக் கூறி வருகிறது.

2021 அக்டோபர் முதல் இந்தியப் பங்குச் சந்தைகளில் அந்நிய நிதி முதலீட்டாளர்கள் 470 கோடி டாலர் நிதி முதலீடுகளை விற்று வெளியேறியுள்ளனர். அக்டோபரில் 227 கோடி டாலர், நவம்பரில் 75.60 கோடி டாலர் மற்றும் டிசம்பரில் 169 கோடி டாலர் மதிப்புள்ள இந்தியப் பங்குகளை அந்நிய நிதி முதலீட்டாளர்கள் விற்றுள்ளனர்.

அமெரிக்காவில் பணவீக்கம் 2 விழுக்காட்டுக்குள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பது அதன் மத்திய வங்கியின் இலக்கு. ஆனால் அமெரிக்காவில் பணவீக்கமானது 6.8 விழுக்காடு உயர்ந்துள்ளது. இந்தியாவிலும் நடப்பு நிலவரத்தில் உணவுப் பொருட்கள், காய்கறிகள் விலைவாசி பெரிதும் உயர்ந்துள்ளது ஆனால் தேசியப் புள்ளியியல் அலுவலகம் வெளியிடும் பணவீக்கம் இந்த இயல்புநிலையைப் பிரதிபலிப்பதாகவே இல்லை. பணவீக்கம் இந்தியாவில் குறைத்து மதிப்பிடப்படுவதாகத் தெரிகிறது.

உலகெங்கிலும் பணவீக்கம் அதிகரித்து வருகிறது. உலகெங்கும் உயரும் பணவீக்கம் வங்கிகளின் வட்டிவிகிதத்தை உயர்த்துவதற்கான வாய்ப்புகளைப் பெருகச் செய்துள்ள சூழலில், பங்குச் சந்தையின் வெறித்தனமான உயர்வும் பெருக்கமும் 2022இல் மட்டுப்படும்.

ரொட்டி முதல் விரைவாக விற்பனையாகும் அனைத்து நுகர்வுப் பொருட்களின் விலையையும் ஜனவரியில் மீண்டும் உயர்த்தப் போவதாகவும், அதிக இடுபொருட்செலவுகளை ஈடுகட்ட இந்த விலைஉயர்வு தேவை என்றும் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. சிறு, குறு, நடுத்தரத் தொழில்களுக்கான மூலப்பொருட்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன. உருக்கு, தாமிரம், அலுமினியம், நெகிழி ஆகிய மூலப்பொருட்களின் விலைகள் கடந்த ஓராண்டில் 40 முதல் 150 விழுக்காடு வரை உயர்ந்துள்ளன. இது குறு, சிறு, நடுத்தரத் தொழில்களை மிகக் கடுமையாகப் பாதித்துள்ளன.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

நிதியமைச்சர் இந்தியாவில் கிரிப்டோ கரன்சிகளின் வர்த்தகத்தைத் தடைசெய்வதற்கான சட்ட மசோதா நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் என முதலில் வாக்குறுதி அளித்தார். அதன் பிறகு உலகளாவிய நடவடிக்கை மட்டுமே கிரிப்டோ கரன்சிகளைத் திறம்பட ஒழுங்குபடுத்துவதற்கான ஒரே வழி என்று கூறினார். அதற்கும் பிறகு இந்தியாவில் கிரிப்டோ கரன்சித் துறையை மேம்படுத்தும் திட்டம் இல்லை என மக்களவையில் நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. இவ்வாறு அவர்களது நிலைப்பாடு தொடர்ச்சியின்றியும் முன்னுக்குப் பின் முரணாகவுமே அமைந்துள்ளது.

பாஜக அரசு விளம்பரத்துக்காகவே செயல்படும் அரசு என்பது பெண் 'குழந்தைகளைக் காப்போம்' திட்டத்தில் வெளிப்படையாகவே தெரியவந்துள்ளது. இத்திட்டத்திற்கான தொகையில் 80% விளம்பரத்துக்காகவே செலவு செய்யப்பட்டதாக நாடாளுமன்றக் குழு அறிக்கை தெரிவிக்கிறது.

டிசம்பர் 15 முதல் அமலுக்கு வந்த புதிய சரக்குக் கொள்கையின்படி இந்திய இரயில்வே தனது வலையமைப்பில் சரக்கு வணிகம் நடத்தும் நிறுவனங்களிடமிருந்து ஆண்டுக்கு வசூலிக்கும் நில உரிமக் கட்டணம் ரூ. 700 கோடியைக் கைவிட முடிவு செய்தது மிகவும் கண்டனத்துக்குரியது.

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட அரசு நிதியுதவி பெற்ற பேட் பேங்க், ஜனவரி இரண்டாவது வாரத்திலிருந்து தனது வணிகத்தைத் தொடங்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறைகளை நீர்க்கச் செய்யும் விதமாக வங்கிகள் தங்கள் வெளிநாட்டுக் கிளைகளில் முதலிடவும், முன் அனுமதி பெறாமல் இலாபத்தைத் திருப்பி அனுப்பவும் அனுமதிக்கப்படும் என இந்தியத் தலைமை வங்கி தெரிவித்துள்ளது. இது இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு அதிக அளவில் நிதி வெளியேறுவதற்கே வழிவகுக்கும்.

வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்ய நிஜமான வங்கிக் கிளைகள் தேவையில்லை. ஏனெனில் மக்கள் கைகளில் உள்ள திறன்மிகுக் கைபேசிகள் இடையூறு இல்லாமல் வங்கிச்

சேவை செய்யக் கூடிய தொழில்நுட்பத் தளத்தை வழங்குகின்றன என நிதியமைச்சர் கூறியுள்ளார்.

அவரது கருத்து வங்கிச் சேவைகளை முற்றிலும் தனியார் மயமாக்கும் போக்கை ஊக்கும் விதமாக உள்ளது. குறைந்த அரசு, நிறைந்த நிர்வாகம் என்பதுதானே பாஜக அரசின் தாரக மந்திரம்! இணைய நாடாளுமன்றமே போதுமல்லவா, அதிகரிக்கும் நிர்வாகச் செலவுகளுடன் கூடிய இவ்வளவு பெரிய நிஜமான நாடாளுமன்றம் எதற்கு? இழுத்து மூடி விடுவோமா? இதுதான் அவரது கருத்துக்குப் பதிலாக நாம் எழுப்பும் கேள்வி.

பொதுத்துறை வங்கிகளின் தனியார்மயமாக்கத்தை மத்திய அரசு கைவிட வேண்டும் என்ற கோரிக்கையுடன் டிசம்பர் 16 மற்றும் 17ஆம் நாள் வங்கி ஊழியர்கள் நாடு தழுவிய வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். அனைத்து இந்திய வங்கி அதிகாரிகள் கூட்டமைப்பின் (AIBOC) பொதுச்செயலாளர் சஞ்சய் தாஸ் தொடர்ந்து போராட்டங்கள், தர்ணாக்கள் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார். மத்திய அரசின் இந்தத் திட்டம் முழுமையாக அரசியல் நோக்கம் சார்ந்த முடிவாகும் என்றும், வங்கிகளைப் பெரிய முதலாளிகள் வசம் கொடுக்கவே அரசு விரும்புகிறது என்றும், நாட்டின் ஒட்டுமொத்த வைப்புத் தொகைகளில் 70 விழுக்காடு பொதுத்துறை வங்கிகளில்தான் இருக்கிறது, இந்த வங்கிகளைத் தனியாரிடம் வழங்கும் போது, சாமானிய மக்களின் வைப்புத் தொகைக்கு ஆபத்து ஏற்படும் என்றும் கூறியுள்ளார்.

பொதுத்துறை வங்கிகளில் அரசுப் பங்குகளின் குறைந்தபட்ச அளவை 51 விழுக்காட்டிலிருந்து 26 விழுக்காடாகக் குறைக்கும் விதமாக வங்கிச் சட்டங்கள் (திருத்தம்) மசோதா வரவிருக்கும் நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடரில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

சிறு குறு நடுத்தர நிறுவனங்களில் 57 விழுக்காட்டினர் பாஜக அரசின் கடன் உத்தரவாதத் திட்டத்தில் கடன் பெறுவது கடினமாக இருந்ததாகப் பதிலளித்துள்ளனர். 150 சிறு குறு நடுத்தர நிறுவனங்களைப் பற்றி மேற்கொண்ட ஆய்வில், 70 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் இரண்டாவது கோவிட் அலையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். 50 விழுக்காட்டினர் அரசுத் திட்டங்கள், சலுகைகள் தொற்றுநோய்த் தாக்கங்களுக்கிடையே நிலைத்திருக்க அவர்களுக்கு உதவவில்லை என்றும், 43 விழுக்காட்டினர் எதிர்மறைத்

தாக்கங்களிலிருந்து விடுபட தங்கள் வணிக மாதிரியை மாற்றிக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர். மேலும், 50 விழுக்காட்டினர் முதல் மற்றும் இரண்டாவது அலைகளின் தாக்கத்தில் இருந்து இன்னும் முழுமையாக மீளவில்லை என்றும் கூறியுள்ளனர். கோவிட் தாக்கத்தின் விளைவாக, 56 விழுக்காட்டினர் டிஜிட்டல் முறைகளைப் பின்பற்றத் தள்ளப்பட்டனர், அதே நேரத்தில் 35 விழுக்காட்டினர் தங்கள் முயற்சிகளுக்கு வெளிப்புற நிதி உதவியை நாடும் நிலையில் உள்ளதாக இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

756 நிறுவனங்களில் செய்யப்பட்ட ஆய்வறிக்கையில் ரூ. 10 இலட்சத்திற்கும் குறைவான கடன் வாங்குபவர்களில் 61 விழுக்காட்டினரும், 10 இலட்சம் முதல் ரூ. 1 கோடி வரை கடன் பெறுபவர்களில் 52 விழுக்காட்டினரும், 1 கோடி முதல் ரூ. 10 கோடி வரை கடன் பெறுபவர்களில் 49 விழுக்காட்டினரும் அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் கடன் பெறுவது எளிதல்ல, மிகக் கடினம் என்று தெரிவித்துள்ளனர்.

இந்தியாவிலும் கடன் அட்டைக் கலாசாரம் பரவலாக அதிகரித்து வருகிறது. அக்டோபர் மாதம் இந்தியாவெங்கும் கடன் அட்டைகளைப் பயன்படுத்தி 21.5 கோடி பரிவர்த்தனைகள் மூலம் ரூ.1 லட்சம் கோடி செலவு செய்யப்பட்டிருக்கிறது. இது முந்தைய மாதத்தை விட சுமார் 25 விழுக்காடு அதிகமாகும். இதைக் கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தோடு ஒப்பிட்டால் கிட்டத்தட்ட 56 விழுக்காடு அதிகமாகும். இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் கடன் அட்டைகளைப் பயன்படுத்தி செலவு செய்த தொகை ரூ.80,477 கோடியாகும்.

சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்காரி கூறுகிறார்: கோவிட் தாக்கம் இருந்த போதிலும் சாலைக் கட்டுமானத்தில் நாடு பல உலக சாதனைகளைப் படைத்துள்ளது. வரும் ஆண்டுகளில் இந்தியாவும் வளமான, வெற்றிகரமான நாடாக மாறும், ஏனெனில் இந்திய சாலைக் கட்டமைப்புகள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் தரத்திற்கு நிகராக இருக்கும்.

வெறும் சாலைகள் போடுவதால் மட்டும் இந்தியாவின் உள்கட்டமைப்பையும், தொழில்நுட்பத்தையும் ஐரோப்பா, அமெரிக்காவின் நிலைக்கு மேம்படுத்தி விட முடியுமா? இந்தியாவில் ஆளுங்கட்சிகள் நெடுஞ்சாலைகளை மட்டுமே உள்கட்டமைப்பாகக் கருதுவது

பொருளாதார நிலைகுலைவை ஏற்படுத்துகிறது.

நிட்டி ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரி அமிதாப் காந்த், இந்தியாவில் பெரிய அளவிலான சீர்திருத்தங்கள் தேவை என்பதால் அனைத்துத் துறைகளிலும் பெருமளவு சீர்திருத்தங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். இந்த அரசாங்கத்தின் அடிப்படைத் தத்துவம் தனியார் துறையே செல்வம் படைக்கிறது என்பதுதான்.

"தனியார் துறையின் தொழிலை எளிதாக்கித் தர வேண்டும், அதற்கு ஊக்கியாகச் செயல்பட வேண்டும், அந்தத் திசையில் அனைத்துச் சீர்திருத்தங்களையும் நாங்கள் தொடர்ந்து முன்னெடுப்போம்" என்றும் அமிதாப் காந்த் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு கூட்டாட்சி அரசியலிலும், இந்தியா போன்ற பரந்த நாடுகளிலும், மாநிலங்கள் மூலம் மாற்றத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். மத்தியத் துறைத் திட்டங்களின் (CSS) கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மாநிலங்களின் நல்ல செயல்திறனின் அடிப்படையில் மத்திய அரசு அளிக்க வேண்டும். சீர்திருத்தப் பாதையைத் தொடரும் மாநிலங்களுக்கு அதிகரித்த நிதியை உறுதி செய்ய முயல வேண்டும். மாநிலங்களுக்கான வணிகத்தை எளிதாக்குதலுக்கான தரவரிசை வெளியிடுவதே போட்டி போட்டுக்கொண்டு மாநிலங்கள் சீர்திருத்தங்களைச் செயல்படுத்த வைக்க வேண்டும் என்பதற்காகவே என்றும் அவர் கூறியுள்ளார். சர்வதேசப் பண நிதியம் நாடுகளிடம் பல அமைப்புமாற்ற நிபந்தனைகளைச் செயல்படுத்தினால் மட்டுமே கடனளிப்போம் என்று நிர்பந்திப்பது போல் நவீன தாராளமயத்தின் ஒட்டுவாலாக ஜனநாயகமற்ற முறையில் இந்தியாவின் மத்திய அரசு மாநிலங்களை மக்களுக்கு எதிரான சீர்திருத்தங்களை மேற்கொண்டால் மட்டுமே நிதியளிப்போம் என நிர்பந்தித்து ஒடுக்குமுறை செய்யும் அவலம் தொடர்கிறது.

நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய உரையாடலில், விவசாயம் உள்ளிட்ட துறைகளில் முதலீடு செய்யுமாறு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார். அவர்களோ விலையை உயர்த்துகிறார்களே ஒழிய புதிய முதலீடுகள் செய்யக் காணோம்.

இந்தியாவில் பல்வேறு தரப்பினரும் நிதிநிலை அறிக்கை குறித்துத் தங்களது கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். கோவிட் நெருக்கடிக்கு மத்தியில் அரசின் சுகாதாரச் செலவினங்களை மேலும் அதிகரிக்கவும், நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தவும், கிராமப்புற வேலை உறுதித் திட்டத்திற்கான செலவினங்களை அதிகமாக்கவும் பல்வேறு சமூகத் துறைகள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறு குறு நடுத்தர நிறுவனங்களின் தரப்பிலிருந்து சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கான மூலதன வரம்பை உயர்த்த வேண்டும், சரக்கு சேவை வரிகளைக் குறைக்க வேண்டும், மேலும் ரூ. 40 இலட்சத்திற்கும் குறைவான புரள்வு மதிப்பைக் கொண்ட நிறுவனங்களை கட்டாய ஜிஎஸ்டி பதிவிலிருந்து விடுவிக்க வேண்டும் என்றும், இலட்சக்கணக்கான விற்பனையாளர்கள், கூடுதலான ஜிஎஸ்டி இணக்க செலவுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர், இவர்களின் செயல்பாடுகள் கோவிட் தாக்கத்தால் பெரிதும் முடங்கிப் போயுள்ளன. ஜிஎஸ்டி பதிவு இல்லாமல் அவர்தம் தொழில்களைத் தொடர அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பு (CII), சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் எளிதாகக் கடன் பெறுவதற்கான திட்டங்களை அரசு கொண்டுவர வேண்டும் என்றும், 2020ஆம் ஆண்டு மார்ச்சு 31உடன் நிறுத்தப்பட்ட அரசின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான நிதித் திட்டத்தையும், கடனுடன் இணைக்கப்பட்ட மூலதன மானியத் திட்டத்தை புதுப்பித்து மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளது. சிறு குறு நடுத்தர நிறுவனங்களில் ரூ. 50,000 கோடி பங்கு செலுத்துவதற்காக ‘ஃபண்ட் ஆஃப் ஃபண்ட்ஸ்’ திட்டத்தை அரசு கடந்த ஆண்டு அறிவித்தது, ஆனால் அது இன்னும் செயல்பாட்டுக்கு வரவில்லை; அதையும் செயல்படுத்த வேண்டும் எனக் கோரியுள்ளது.

இணை நிதியமைச்சர் பகவத் காரத் விவசாயம், வேளாண் செயலாக்கத் துறையின் பிரதிநிதிகளுடன் நிதிநிலை அறிக்கை தொடர்பான ஆலோசனைகளை பெற மெய்நிகர் கூட்டாய்வை நடத்தினர். அதில் விவசாயிகளின் அமைப்புகளும், வேளாண் வல்லுனர்களும் யதார்த்தமான உற்பத்திச் செலவு அடிப்படையிலான குறைந்தபட்ச ஆதரவு விலை

அளிக்கவேண்டும், டீசல் மானியத்தை உயர்த்த வேண்டும், புதிய தொழில்நுட்பங்களை அனுமதிக்கவேண்டும் பொன்ற கோரிக்கைகளை அளித்துள்ளனர். விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்கும் இலக்கை அடைவதற்காக, இந்திய விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு (CIFA) தலைமை ஆலோசகர் பி. செங்கல் ரெட்டி விவசாயத்திற்கான முன்னுரிமைத் துறை கடன்களை 25 விழுக்காடாக உயர்த்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய நிதியமைச்சர் மாநில நிதியமைச்சர்களுடன் மேற்கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் பெரும்பாலான மாநிலங்கள் ஜவுளி ஆடைத்துறையின் மீதான சரக்கு-சேவை வரியை 5 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காட்டிற்கு உயர்த்தியதைத் திரும்பப் பெற வேண்டும் எனவும், மத்திய நிதியுதவி திட்டங்களில் மத்திய அரசு தனது செலவினப் பங்கை உயர்த்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளன. மத்திய அரசு ஜவுளித் துறையின் மீதான 12 விழுக்காடு சரக்கு-சேவை வரி உயர்வைத் திரும்பப் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டின் நிதியமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட பொதுமுடக்கத்தால் சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன; ஆகவே அவற்றுக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்தும் வகையில் ஒரு விரிவான நிதித் தொகுப்பை அளிக்குமாறு கோரியுள்ளார்.

பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளுக்குள் நிபந்தனையின்றிக் கடன் வாங்க மாநிலங்களை அனுமதிக்குமாறு மத்திய அரசை அவர் வலியுறுத்தியுள்ளார். மேலும், வருவாய் கணிசமாகக் குறைந்த நிலையில் கோவிட்-19ஐ எதிர்த்துப் போராடுவதற்கு மாநிலங்கள் பெரும் செலவினங்களைச் செய்திருப்பதால், 2022 - 23 நிதியாண்டுகளுக்கு எந்த நிபந்தனையும் இன்றி மாநிலங்களின் மொத்தப் பொருளாக்க மதிப்பில் 5 விழுக்காட்டைக் கடனாகப் பெற அனுமதிக்குமாறு அரசை வலியுறுத்தியுள்ளார்.

மாநிலங்களின் மொத்தப் பொருளாக்க மதிப்பில் 1 விழுக்காடு கடன் பெறுவதற்கான மத்திய அரசின் முன்னிபந்தனைகள் மாநில நிதி மற்றும் அதன் செலவின முறைகளை மோசமாக பாதிக்கின்றன என்றும் நிதியமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய ஒன்றியத்தின் மொத்த வரி வருவாயில் செஸ்கள் மற்றும் கூடுதல் கட்டண விகிதங்கள் 2010-11ல் 6.26 விழுக்காடாக இருந்து 2020-21இல் 19.9 விழுக்காடாகக் கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. உண்மையில், ஒன்றியம் சேகரிக்கும் வருவாயில் சுமார் 20 விழுக்காடு பங்கை மாநிலங்கள் இழக்கின்றன. இந்த வரிகளைப் பகிரக் கூடிய தொகுப்பில் சேர்த்திருந்தால், 2021-22 நிதியாண்டில் மத்திய வரிகளின் தொகுப்பிலிருந்து மாநிலங்கள் தங்கள் பங்காக சுமார் ரூ. 1.5 லட்சம் கோடி கூடுதலாகப் பெற்றிருக்கும். மாநிலங்கள் அதிகாரப் பகிர்வில் நியாயமான பங்கைப் பெறும் வகையில், அடிப்படை வரி விகிதங்களில் செஸ் மற்றும் கூடுதல் கட்டணங்களையும்ப் பகிரும் வருவாயுடன் இணைக்குமாறும் மத்திய அரசை அவர் வலியுறுத்தியுள்ளார்.

மாநிலங்களுக்கான சரக்கு-சேவை வரிக்கான இழப்பீட்டுத் தொகை 2022 ஜூன் மாதத்துடன் முடிவுபெறவுள்ளது. கோவிட்-19 தாக்கத்தால் மாநிலங்களின் வருவாய் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் 2027 வரை மேலும் ஐந்தாண்டுகளுக்கு சரக்கு சேவை இழப்பீட்டுத் தொகை அளிக்கும் விதத்தில் சரக்கு சேவை வரிச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும் என மாநிலங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

சத்தீஸ்கரின் நிதியமைச்சர் ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) அளிக்க வேண்டும் என்றும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் ஊதியத்தை உயர்த்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசுத் துறைகளின் நியாயமான கோரிக்கைகளையும் முடக்கும் விதத்தில், அடுத்த நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கைக்கான முன்மொழிவு என்ற போர்வையில் எந்த அரசுத் துறையும் கூடுதல் செலவு கேட்கக் கூடாது என்று நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பிரிக்ஸ் கூட்டமைப்பிற்கான செயல்பாட்டு அறிக்கையில் இந்தியா கோவிட்-19 தொற்றுநோய்த் தாக்கத்தின் போது 15.1 விழுக்காடு நிதிச் சலுகை வழங்கியுள்ளதாக மத்திய அரசு கதை கட்டியிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் (CEA) அரவிந்த் சுப்பிரமணியன், பொருளாதாரம் முந்தைய ஆண்டின் பெரிய சரிவிலிருந்து மீண்டு வருவதை அவசரப்பட்டுப் பொருளாதார மீட்சி எனக் கொண்டாட வேண்டாம் என்று எச்சரித்துள்ளார்.

2013-14 முதல் 2018-19 வரையிலான காலக்கட்டத்தில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அலுவலகத் தரவுகளால் காட்டப்பட்ட ஏழு விழுக்காடாக இல்லாமல், இயல்பான அல்லது சாத்தியமான மொ.உ.பொ. (ஜிடிபி) வளர்ச்சி விகிதம் நான்கு விழுக்காடாக இருந்தது எனவும், இந்தப் பின்னணியில் பொருளாதாரத்தின் உண்மையான வளர்ச்சியை மதிப்பீடு செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உற்பத்தித் திறனுடன் இணைக்கப்பட்ட ஊக்கத் தொகைகள் (PLI) பெரும்பாலும் தொழில்நுட்பம் மற்றும் மூலதனச் செறிவுமிக்கத் துறைகளுக்குப் பலன்களைத் தரும். இந்தியாவில் உள்ளடங்கிய வளர்ச்சியை நாம் விரும்பினால், திறனற்ற உழைப்பு செறிந்த துறைகளில் மிகுந்த வளர்ச்சி தேவை. ஆனால் உற்பத்தித் திறனுடன்-இணைக்கப்பட்ட ஊக்கத் தொகைகள் இதற்கு உதவும் வகையில் இல்லை என்றும் கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) மூலம் கணிக்கப்பட்டுள்ளபடி, இந்தியா 2021-22ஆம் ஆண்டிற்கான உண்மையான ‘ஜிடிபி’ வளர்ச்சி 9.5 விழுக்காட்டை எட்டுவது குறித்துப் பொருளாதார வல்லுனர் சி ரங்கராஜன் தன் ஐயத்தைப் பதிவு செய்துள்ளார். தேசியப் புள்ளியியல் அலுவலகம் வெளியிட்ட தரவுகளின்படி, நடப்பு நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் பொருளாதாரம் 8.4 விழுக்காடு வளர்ந்துள்ளது. ஏப்ரல்-ஜூன் 2021 காலாண்டின் 20.1 விழுக்காடு வளர்ச்சி, இரண்டாவது காலாண்டில் வளர்ச்சி ஆகியவை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சரிவை ஈடுசெய்துள்ளதே தவிர, அதைத் தாண்டி அதிக சாதகமான வளர்ச்சியைக் குறிக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். மூன்றாம் காலாண்டிலும், நான்காம் காலாண்டிலும் வளர்ச்சி வலுவாக இருந்தாலொழிய, இந்த முழு ஆண்டு வளர்ச்சிக் கணிப்பு நிறைவேறுவது சாத்தியமில்லை. மாறாக, 2021-22ஆம் ஆண்டிற்கான நாட்டின் உண்மையான ஜிடிபி வளர்ச்சி ஏழு முதல் எட்டு விழுக்காடு வரை இருக்கும் எனத் தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**<u>பணவீக்கம்:</u>**

சென்ற ஆண்டு நவம்பரில் 2.29 விழுக்காடாக இருந்த மொத்த விலைப் பணவீக்கம் இந்த ஆண்டு நவம்பரில் 14.23 விழுக்காடாக உயர்ந்துள்ளது, எரிபொருள், ஆற்றலின் விலைவாசி 39.81 விழுக்காடு உயர்ந்துள்ளது உற்பத்திப் பொருட்களின் விலைவாசி 11.92 விழுக்காடு உயர்ந்துள்ளது. கனிம எண்ணெய்கள், அடிப்படை உலோகங்கள், உணவுப் பொருட்கள், கச்சா பெட்ரோலியம் ஆகியவற்றின் விலை உயர்வினால் பணவீக்கம் இந்தளவுக்கு உயர்ந்துள்ளது. நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறைப் பணவீக்கத்தின் அளவு நவம்பர் மாதத்தில் 4.91 விழுக்காடு அதிகரித்துள்ளது, சென்ற மாதத்துடன் ஒப்பிடும் போது 0.78 விழுக்காடு உயர்ந்துள்ளது. உணவுப் பொருட்களின் விலைவாசி 1.87 விழுக்காடு அதிகரித்துள்ளது. சென்ற மாதத்துடன் ஒப்பிடும் போது 1.40 விழுக்காடு உயர்ந்துள்ளது. காய்கறிகளின் விலைவாசி 13.62 விழுக்காடு குறைந்துள்ளது. பழங்களின் விலைவாசி 6.03 விழுக்காடு உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளின் விலைவாசி 3.18 விழுக்காடு அதிகரித்துள்ளது. முட்டையின் விலை 1.31 விழுக்காடு குறைந்துள்ளது. எண்ணெய், கொழுப்பு ஆகியவற்றின் விலைவாசி 29.67 விழுக்காடு அதிகரித்துள்ளது. மீன், இறைச்சியின் விலைவாசி 5.55 விழுக்காடு உயர்ந்துள்ளது.

**<u>அக்டோபர் மாதத்தில் தொழில்துறை வளர்ச்சி:</u>**

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி அக்டோபர் மாதத்தில் உற்பத்தி 3.2 விழுக்காடு உயர்ந்துள்ளது. முதன்மைத் துறைகளில் சுரங்கத் துறை, செய்பொருளாக்கத் துறை, மின்சாரத் துறை ஆகியவற்றில் உற்பத்தி முறையே 11.4, 2.0, 3.1 விழுக்காடு உயர்ந்துள்ளது. முதன்மைப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், கட்டுமானப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி அளவுகள் முறையே 9.0, 2.1, 5.3 விழுக்காடு உயர்ந்துள்ளன. மூலதனப் பொருட்களின் உற்பத்தி 1.1 விழுக்காடு குறைந்துள்ளது. உடனடி நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 0.5 விழுக்காடு உயர்ந்துள்ளது. நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 6.1 விழுக்காடு குறைந்துள்ளது.

**<u>நவம்பரில் தொழில்துறை வளர்ச்சி:</u>**

இந்தியாவின் தொழில்துறை, உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட எட்டு முக்கிய தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக்குறியீடு நவம்பரில் 3.1 விழுக்காடு அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு அக்டோபர் மாத உற்பத்தி அளவோடு ஒப்பிடும் போது

நிலக்கரி உற்பத்தி 8.2 விழுக்காடு அதிகரித்துள்ளது. கச்சா எண்ணெய் உற்பத்தி 2.2 விழுக்காடும், சிமெண்ட் உற்பத்தி 3.2 விழுக்காடும் குறைந்துள்ளது. பெட்ரோலிய சுத்திகரிப்பு பொருட்களின் உற்பத்தி 4.3 விழுக்காடு அதிகரித்துள்ளது. உர உற்பத்தி 2.5 விழுக்காடு அதிகரித்துள்ளது. இயற்கை எரிவாயு உற்பத்தி 23.7 விழுக்காடும், எஃகு உற்பத்தி 0.8 விழுக்காடும், மின்சார உற்பத்தி 1.5 விழுக்காடும் அதிகரித்துள்ளது.

உலக வர்த்தக அமைப்பில் 2014-15 முதல் 2018-19, வரை இந்தியா கரும்பு உற்பத்தியாளர்களுக்கு கரும்பு உற்பத்தியின் மொத்த மதிப்பில் 10 விழுக்காட்டிற்கும் கூடுதலாகத் தயாரிப்பு சார்ந்த உள்நாட்டு ஆதரவு வழங்கியது என பிரேசில், ஆஸ்திரேலியா, குவாத்தமாலா ஆகிய நாடுகள் புகார் அளித்துள்ளன. சர்க்கரை மானியம் தொடர்பான இந்த சர்ச்சை இந்தியாவுக்கு எதிராகத் திரும்பியுள்ளது. வர்த்தக அமைப்பின் உறுதிமொழிகளுக்கு இணங்கும் வகையில் பெரும்பாலும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மட்டுமே ஆதரவு அளித்துள்ளதாகப் பதிலளித்த இந்தியா இந்த வழக்கில் மேல்முறையீடு செய்ய திட்டமிட்டுள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான உலக சமத்துவமின்மை அறிக்கையின்படி, தாராளமயமும், பொருளாதாரச் சீர்திருத்தமும் மக்கள்தொகையில் ஒரு சிறிய பகுதியினருக்கு மட்டுமே பயனளித்துள்ளது. உலக மக்கள்தொகையில் முதல் 10 விழுக்காட்டினரின் வருவாயும் செல்வச் செறிவும் அதிகரித்து வருகின்றன. உலகின் அதிக சமத்துவமற்ற 10 நாடுகளின் பட்டியலில் இந்தியா உள்ளது. இந்தியாவில் முதல் 10 விழுக்காட்டினர் தேசிய வருவாயில் 57.1 விழுக்காட்டைப் பெற்றுள்ளனர். அதே சமயம் கீழே உள்ள 50 விழுக்காட்டு மக்கள் மொத்த வருவாயில் 13.1 விழுக்காட்டையே பெற்றுள்ளனர். முதல் 10 விழுக்காட்டினரின் சராசரி வருவாய் கீழேயுள்ள 50 விழுக்காட்டினரின் சராசரி வருவாயை விட 22 மடங்கு கூடுதலாக உள்ளது. இந்தியாவில் வருவாய்ச் சமத்துவமின்மை சீனா, அமெரிக்காவை விட அதிகமாக உள்ளது, சீனாவில் முதல் 10 விழுக்காட்டினரின் வருவாய் தேசிய வருவாயில் 41.7 விழுக்காடாக உள்ளது. சீனாவில் கீழே உள்ள 50 விழுக்காட்டினரின் வருவாய் மொத்த வருவாயில் 14.4 விழுக்காடாக உள்ளது. அமெரிக்காவில் முதல் 10 விழுக்காட்டினரின் வருவாய் மொத்த தேசிய வருவாயில் 45.5 விழுக்காடாக உள்ளது. கடைசி 50 விழுக்காட்டினரின் வருவாய் மொத்த வருவாயில் 13.3 விழுக்காடாக உள்ளது.

உலகச் சமத்துவமின்மை அறிக்கையின்படி, இந்தியாவின் வருவாய் சமத்துவமின்மை கடந்த காலத்தில் இருந்து கவனிக்கும் போது ஒரு 'U' வடிவப் பாதையை மேற்கொண்டுள்ளது. பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தில் முதல் 10 விழுக்காட்டினரின் வருவாய் பங்கு சுமார் 50 விழுக்காடாக இருந்துள்ளது. சுதந்திரத்திற்குப் பிறகு, சோசலிசத்தால் ஈர்க்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களால் முதல் பத்து விழுக்காட்டினரின் வருவாய் பங்கு 35-40 விழுக்காடாகக் குறைக்க உதவியது. 1990 களில் பொருளாதார சீர்திருத்தத்திற்குப் பிறகு அதிகரித்த சமத்துவமின்மையால் முதல் 10 விழுக்காட்டினரின் வருவாய் பங்கு 57.1% ஆக உயர்ந்துள்ளது. பொருளாதாரச் சீர்திருத்தங்களால் முதல் 10 விழுக்காட்டினரே பெருமளவில் பயனடைந்துள்ளனர், இந்த பெருகிவரும் வருவாய் செறிவின் முழுச் சுமையும் மக்கள்தொகையில் மிக ஏழ்மையான பாதிப் பகுதியினரால் சுமக்கப்பட்டது என்றும் இந்தாய்வறிக்கை கூறுகிறது. உலகளாவிய சொத்து வரியுடன், வருவாயில் 1.6 வரி விதித்து அதில் பெறப்படும் நிதியை கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் மாற்றத்தில் மீண்டும் முதலீடு செய்யலாம் எனவும் பரிந்துரைத்துள்ளது.

பிரிட்டிஷ் காலனியாக இந்தியா இருந்த காலத்தைக் காட்டிலும் தற்போது பாஜக ஆளும் இந்தியாவில் பொருளாதாரச் சமமின்மை அதிகரித்துள்ளது. பிற்போக்கான மன்னராட்சிக் காலத்தில் பயணிக்கிறது இந்தியாவின் "மக்களாட்சி". உலகின் அதிகச் சமத்துவமற்ற 10 நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம் பெற்றுள்ளதை பாஜக அரசு தன் சாதனையாகக் கொண்டாடினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

# வரிப் புகலிடம் (Tax Haven) என்றால் என்ன?

**சமந்தா**




வரி நீதிக்கான வலையமைப்பு (Tax justice network) வரிப் புகலிடம் குறித்து அளித்துள்ள விளக்கம் பின்வருமாறு:

வரிப் புகலிடம் என்றால் என்ன? என்பதற்கு உலகளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட வரையறை இல்லை என்றாலும், வரிப் புகலிடம் என்பது பொதுவாகப் பன்னாட்டு நிறுவனங்களும் தனிநபர்களும் தங்களின் செல்வத்தையும், நிதி நடவடிக்கைகளையும் தாங்கள் செயல்படும், வாழும் நாடுகளின் சட்டத்தின் ஆட்சியிலிருந்து தப்பிக்க வைக்க உதவும் நாடு அல்லது சரகம்யைக் குறிக்கிறது. நிறுவனங்களும் தனிநபர்களும் செலுத்த வேண்டியதை விடக் குறைவாக வரி செலுத்தவும் (வரி மோசடி செய்ய) அந்த நாடுகள் உதவுகின்றன.

"கமுக்கச் சரகம்" (secret jurisdiction) என்ற சொல் சில நேரங்களில் "வரிப் புகலிடம்"




என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகிறது, இது பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்த வரி செலுத்துவதற்காக நாடுகளிலிருந்து வரியைக் கடத்துவதைத் தாண்டி தனிநபர்கள் தங்கள் செல்வம் மற்றும் நிதி விவகாரங்களை சட்டத்தின் ஆட்சியிலிருந்து மறைப்பதற்கு நிபுணத்துவம் பெற்ற சரகங்களைக் குறிக்கவும் பயன்படுகிறது.

**வரிப் புகலிடங்களில் பணக்காரர்கள் எவ்வாறு செல்வத்தை மறைத்து வைக்கிறார்கள்?**

வரிப் புகலிடங்களில் மக்கள் தங்கள் செல்வத்தை மறைக்கும் பொதுவான வழிகளில் ஒன்று, அவர்களின் அடையாளம் அல்லது சொத்துகள் பற்றிய தகவல்களை வெளியிடாமல் தங்கள் சொத்துக்களை வைத்திருக்கச் சட்டப்பூர்வமான அமைப்பை (நிறுவனம் அல்லது அறக்கட்டளை போன்றவை) ஏற்படுத்துவதாகும். இந்த கமுக்கக் கட்டமைப்புகள் உரிமையாளருக்கும் அவர்களின் செல்வத்துக்கும் இடையே திரைச்சீலை அல்லது மறைப்பு போல் செயல்படுகின்றன, உரிமையாளரின் அடையாளத்தை மறைத்து, அவர்களது செல்வத்தின் உண்மையான மதிப்பை மறைக்க உதவுகின்றன, இதனால் இறுதியில், அவர்கள் செலுத்த

வேண்டியதை விடக் குறைவான வரியையே செலுத்துகின்றனர்.

வழக்கறிஞர்கள், கணக்காளர்கள், வங்கியாளர்கள், அறக்கட்டளை நிறுவனத்தை உருவாக்கும் முகவர்கள் மற்றும் பிற தொழில் வல்லுநர்கள் ஆகியோரின் பெரிய உள்கட்டமைப்பு மூலம் செல்வந்தர்கள் பயன்படுத்தக் கூடிய பலவிதமான நிதிக் கருவிகள் உள்ளன. சில கமுக்க சரகங்க்ள் தங்கள் அதிகார வரம்பிற்கு கீழ் நிறுவப்பட்ட நிறுவனங்களைப் பற்றிய தகவல்களைக் கொண்டிருப்பதில்லை. இதனால் அவர்களை தங்கள் வாடிக்கையாளர்களைப் பற்றிய தகவலை வெளிப்படுத்த கட்டாயப்படுத்த முடியாது. வங்கியாளர்கள் தங்கள் வாடிக்கையாளர்களைப் பற்றிய தகவல்களை புலனாய்வு அதிகாரிகளிடம் வெளியிடுவதை சட்டவிரோதமாக்குவதன் மூலம் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் வெளிப்படைத் தன்மைக்கும் தீவிரமான தடைகளையும் ஏற்படுத்துகின்றனர்.

**வரிப் புகலிடங்கள் எப்படி உருவாயின?**

காலனியாதிக்கம், பேரரசியத்திற்குப் பிந்தைய சகாப்தத்தில் வரிப் புகலிடங்கள் வளர்ந்தன. நாடுகள் காலனியாதிக்க ஆட்சியில் இருந்து சுதந்திரம் கோரியதால், 'குடியேறியவர்கள்', காலனியாதிக்க நாடுகளின் அதிகாரிகள், வணிகர்கள் காலனிகளின் உலகத்தை விட்டு வெளியேறினர், மேலும் 'தங்கள்' சொத்துக்களை வரிக்குட்படுத்தாமல் தங்களுடன் எடுத்துச் செல்வதற்கான அதிநவீன வழிமுறைகள் தேவைப்பட்டன. இந்தச் சூழல் உலகப் பொருளாதாரத்தில் வரிப்புகலிடங்களை உட்பொதிப்பதற்கு முக்கியக் காரணமானது.

பல்வேறு வழிகளில், வரிப் புகலிடங்கள் 'இரண்டாம் பேரரசுகளாக'ச் செயல்படுகின்றன, இது செல்வம் மற்றும் சக்திவாய்ந்தவர்கள் வரி வருவாயைத் தொடர்ந்து சுரண்டுவதற்கு உதவுகிறது. செல்வந்தர்கள் தங்களுடைய செல்வத்தை (அல்லது தங்களை) பிற அதிகார வரம்புகளுக்கு கொண்டுசெல்வதும், தங்கள் தாய்ச் சமுதாயத்தின் பொறுப்புகளில் இருந்து தப்புவதும் எப்போதுமே சாத்தியமாக உள்ளது, ஒரு காலத்தில் அவர்கள் கட்புலனாகக் கூடிய வகையில் அவர்கள் சார்பாக மற்றவர்களுக்கு எடுத்துச் செல்ல முடிந்த அல்லது பணம் செலுத்த முடிந்ததை விட வரி புகலிடங்கள், நவீன நிதியமைப்பின் வாய்ப்புகள் அதிகமாக இன்று எல்லையற்றதாகக் காணப்படுகிறது.

1848இல் சுவிஸ் கூட்டமைப்பு நிறுவப்பட்டது, முதல் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் அடையாளங்காணக் கூடிய வரிப் புகலிடத்தின் பிறப்பைக் குறிக்கக் கூடும். இருப்பினும் ஜெனிவா மற்றும் சூரிச்சில் உள்ள வங்கியாளர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே கமுக்கமான சூழ்நிலையில் ஐரோப்பியர்களின் செல்வத்தைப் பாதுகாத்தனர். கரீபியன், ஆங்கிலக் கால்வாய் மற்றும் பிற இடங்களில் உள்ள பல்வேறு கடற்கொள்ளையர்களின் குடாக்களை ஆரம்பகால நாடுகடந்த நடவடிக்கை (offshore) என்று குறிப்பிடலாம்.

1960களில் இருந்து நிதி-உலகமயமாக்கத்தின் சகாப்தம் நாடுகடந்த நடவடிக்கையின் ஒரு புதிய, மிகவும் தீவிரமான கட்டத்தைக் குறித்தது, ஏனெனில் நிலையான, கமுக்கமான சுவிஸ் பாணியிலான வங்கிக் கமுக்கத் தன்மையை, கரீபியன், பிரிட்டானிய முடியாட்சியைச் சார்ந்த நாடுகள், இலக்சம்பர்க் மற்றும் பிற ஐரோப்பியப் புகலிடங்களின் அதிதீவிரமான, அதிவேகமான ஆங்கிலோ-சாக்சன் வகைகள் இட்டு நிரப்பின.

குறிப்பாக 1970களில் இருந்து அமெரிக்கா திட்டமிட்டே கமுக்க வசதிகளை ஏற்படுத்தத் தொடங்கியது. அயர்லாந்து மற்றும் நெதர்லாந்து போன்ற ஐரோப்பிய சரகங்கள் நாடுகடந்த நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கின. ஆசியப் புகலிடங்கள், குறிப்பாக ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் ஆகியவையும் நீண்ட வரலாறுகளைக் கொண்டிருக்கின்றன, அவை பெரும்பாலும் சட்டவிரோதமாக நாடு கடத்தப்பட்ட நிதிக்கான மையங்களாக உள்ளதுடன் அவை இச்செயல்பாடுகளில் மிக வேகமாக வளர்ந்து வரும் பகுதியாக உள்ளன.

**வரிப் புகலிடங்களில் எவ்வளவு பணம் உள்ளது?**

$21 முதல் $32 டிரில்லியன் நிதிச் சொத்துக்கள் நாடுகடந்த வரிப் புகலிடங்களில் உள்ளன. வரிப் புகலிட அமைப்பில் மறைந்திருக்கும் கமுக்கம் காரணமாக, துல்லியமான மதிப்பு கிடைப்பது கடினம், எனவே மதிப்பீடுகள் மாறுபடலாம். வரி நீதிக்கான வலையமைப்பு மதிப்பிட்டுள்ளபடி, 427 பில்லியன் டாலர் வரியானது வரிப் புகலிடங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் கட்டத்தப்பட்டு இழக்கப்படுகிறது.

**வரிப் புகலிடங்கள், கமுக்கச் சரகங்கள்:**

வரிப் புகலிடம் என்ற சொல்லே பிரச்சனைக்குரியதாக உள்ளது, ஏனெனில் இந்த இடங்கள் வரி மோசடியைத் தாண்டிப் பல வசதிகளை வழங்குகின்றன. அவை குற்றவியல் சட்டங்களையும், கோரப்படும் வெளிப்படைத்தன்மையையும், நிதிக் கட்டுப்பாட்டையும், பரம்பரை விதிகளையும் மற்றும் பலவற்றையும் தவிர்க்க அனுமதிக்கின்றன.

தனிநபர்கள் தங்கள் செல்வம் மற்றும் நிதி விவகாரங்களை சட்டத்தின் ஆட்சியிலிருந்து மறைக்கவும், பன்னாட்டு நிறுவனங்கள் தாங்கள் செயல்படும் நாடுகளில் குறைந்த வரி செலுத்தவும், அங்கிருந்து வரியை கடத்தவும் நிபுணத்துவம் வாய்ந்த சரகங்ககளைக் குறிக்க வரிப் புகலிடத்திற்குப் பதிலாக "கமுக்கச் சரகம்" என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, அயர்லாந்து ஒரு பெருநிறுவன வரிப் புகலிடமாகும், ஆனால் உண்மையில் அது ஒரு கமுக்கச் சரகம் அல்ல. சுவிட்சர்லாந்து, இலக்சம்பர்க் ஆகிய நாடுகள் கமுக்க வங்கியியல், பெருநிறுவன வரி மோசடி மற்றும் பரந்த அளவிலான பிற நாடுகடந்த சேவைகளை வழங்குகின்றன. ஐக்கிய முடியரசு கமுக்க வங்கிச் சேவை வழங்கவில்லை, ஆனால் அது தளர்வான நிதிக் கட்டுப்பாடு உட்பட இன்னும் பரந்த அளவிலான நாடுகடந்த சேவைகளை விற்பனை செய்கிறது.

பல சர்வதேச அமைப்புகள் தங்களுக்கென சொந்த வரிப் புகலிடங்களின் பட்டியலைக் கொண்டுள்ளன, அவை அரசியல் தேவைகளுக்களால்ல் அடிக்கடி வளைந்து கொடுக்குமாறு செய்யப்படுகின்றன. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவை அரசியல்மயமாக்கப்பட்டவை. மேலும் அவை ஆதார அடிப்படையிலான பட்டியல்கள் அல்ல. இந்த பட்டியல்கள் அமெரிக்கா போன்ற பெரிய, சக்திவாய்ந்த நாடுகளை ஒதுக்கி அல்லது இத்தகைய நடவடிக்கைகளில் அவற்றின் பங்கைக் குறைத்துக் காட்ட முனைகின்றன. ஆனால் சிறிய, பலவீனமான நாடுகளை முன்னிலைப்படுத்துகின்றன.

பல வருட முழுமையான ஆராய்ச்சியின் விளைவாக வரி நீதிக்கான வலையமைப்பு இரண்டு குறியீடுகளை வெளியிடுகிறது. அவை: 1. நிதிக் கமுக்கத்திற்கான குறியீடு, 2. பெருநிறுவன வரி மோசடிக்கான குறியீடு. இக்குறியீடுகள் நாடுகளுக்கு எந்த சலுகையும்

அளிக்காமல் பாரபட்சமின்றி ஈராண்டுக்கு ஒரு முறை நிபுணர் குழுவின் கடுமையான மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படுகின்றன:

நிதிக் கமுக்கக் குறியீடு, சரகங்களை அவை எவ்வளவு உலகளாவிய நிதிக் கமுக்கத்தைச் செயல்படுத்துகின்றன என்பதன் அடிப்படையில் வரிசைப்படுத்துகிறது.

பெருநிறுவன வரி மோசடிக்கான குறியீடு, அவை எவ்வளவு உலகளாவிய பெருநிறுவன வரி மோசடிகளைச் செயல்படுத்துகின்றன என்பதன் அடிப்படையில் சரகங்களை வரிசைப்படுத்துகிறது.

இந்தக் குறியீடுகளில் உங்கள் நாடு முதலிடத்தில் இருந்தால், அது உலகின் மிக மோசமான குற்றவாளிகளில் ஒன்று என்று அர்த்தம். ஆனால் குறியீட்டில் கீழே உள்ள நாடுகள் அப்பழுக்கற்றவை என்று பொருள் கொள்ள முடியாது. அனைத்து சரகங்களும் உலகளாவிய வரிமோசடியில் தங்கள் பங்கை முடிவுக்குக் கொண்டுவர அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**<u>பெருநிறுவன வரி மோசடிக்கான குறியீடு:</u>**

பெருநிறுவன வரி மோசடிக்கான குறியீடு என்பது பன்னாட்டு நிறுவனங்களுக்கு பெருநிறுவன வருவாய் வரியை குறைவாக செலுத்த உதவுவதில் மிகவும் உடந்தையாக இருக்கும் ஆட்சிப்பகுதிகளின் தரவரிசையாகும். பெருநிறுவன வரி மோசடிக்கான குறியீடு ஒவ்வொரு ஆட்சிப்பகுதியின் வரி மற்றும் நிதி அமைப்புகளையும் முழுமையாக மதிப்பீடு செய்து, உலகளாவிய பெருநிறுவன வரி மோசடிக்குத் துணைபோகும் உலகின் மிகப் பெரிய உதவியாளர்களைப் பற்றிய தெளிவான சித்திரத்தை தருகிறது. மேலும் ஆட்சிப்பகுதிகளின் பெருநிறுவன வரி மோசடிக்கான செயல்பாடுகளைக் குறைக்க கொள்கை வகுப்பாளர்கள் திருத்தவேண்டிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை முன்னிலைப்படுத்தவும் உதவுகிறது.

சரகங்கள் அவற்றின் பெருநிறுவன வரி மோசடிக்கான குறியீட்டைக் கொண்டு தரவரிசைப்படுத்தப்படுகின்றன, இக்குறியீடு ஒரு சரகத்தின் புகலிட மதிப்பெண்ணை, உலகுதழுவிய அளவிலான அதன் எடையுடன் இணைத்துக் கணக்கிடப்படுகிறது. சரகத்தின்

புகலிட மதிப்பெண்ணில், பெருநிறுவன வரி மோசடிக்கான எவ்வளவு வாய்ப்புகளை சரகங்களில் உள்ள வரி மற்றும் நிதி அமைப்புகள் அனுமதிக்கின்றன என்பது 20 குறிகாட்டிகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. ஒரு சரகத்தின் உலகுதழுவிய அளவிலான எடை என்பது பன்னாட்டு நிறுவனங்களுக்கு எவ்வளவு நிதிச் செயல்பாடுகளை அச்சரகம் வழங்குகிறது என்பதற்கான அளவீடு ஆகும். சரகத்தில் உள்ள புகலிட மதிப்பெண்ணை உலக அளவிலான எடையுடன் இணைக்கும் போது, சரகத்தில் உலகின் பெருநிறுவன நிதிச் செயல்பாடுகளுக்கு எவ்வளவு பெருநிறுவன வரி மோசடி அச்சுறுத்தல் உள்ளது என்பதைப் பற்றிய சித்திரம் பெறப்படுகிறது.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

# வரிப் புகலிடங்கள் எங்கே அமைந்துள்ளன?

**சமந்தா**

வரிப் புகலிடங்கள் உலகம் முழுவதும் அமைந்துள்ளன. பெரும்பாலான வரிப் புகலிடங்கள் சுவிட்சர்லாந்து, இலக்சம்பர்க், பிரிட்டன், அமெரிக்கா போன்ற பணக்கார நாடுகளாகும், அல்லது பிரிட்டிஷ் விர்ஜின் தீவுகள், கேமன் போன்ற பணக்கார நாடுகளின் சார்புப் பகுதிகளாகும்.

எல்லா நாடுகளும் வரிப் புகலிடத்திற்கான அளவுகோலின் வீச்சில் ஏதாவது ஓரிடத்தில் உள்ளன. அவற்றில் சில சிறிய அளவில் உலகளாவிய வரி மோசடியைச் செயல்படுத்துகின்றன, மற்றவை பெரிய அளவில் செயல்படுத்துகின்றன. ஒவ்வொரு நாடும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உலகளாவிய வரி மோசடியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும் என்ற போதும் கூட, மிக மோசமாகக் குற்றமிழைக்கும் வரிப் புகலிடங்கள் மற்ற நாடுகளை விட உலகளாவிய வரி மோசடியில் மிகப் பெரிய பங்கைச் செயல்படுத்துகின்றன. இந்த மோசமான குற்றவாளிகளை நான்கு குழுக்களாக தொகுக்கலாம்.

முதலாவது குழுவில் ஐக்கிய முடியரசு, அதனைச் சார்ந்த ஜெர்சி, குர்ன்சி மற்றும் ‘ஐல்

ஆஃப் மேன்', அதன் 14 வெளிநாட்டு பிரதேசங்களில் பெரும்பாலும் கரீபியனில் உள்ள ஏழு பகுதிகளான பிரிட்டிஷ் விர்ஜின் தீவுகள், கேமன், பெர்முடா, டர்க்ஸ், கைகோஸ் போன்றவை அடங்கும்.

இரண்டாவது குழுவில், பெருநிறுவன நடவடிக்கைகளுக்குப் பெரிதும் உதவுகிற இலக்சம்பர்க், நெதர்லாந்து, அயர்லாந்து, சுவிட்சர்லாந்து உள்ளிட்ட ஐரோப்பியக் குழுமம், மற்றும் லிச்சென்ஸ்டீன், அன்டோரா போன்ற சிறு பகுதிகள் உள்ளன.

மூன்றாவது குழுவில் அமெரிக்கா முக்கியப் பங்காளராக உள்ளது. கூட்டாட்சி அளவிலும் (குறிப்பாக வங்கிக் கமுக்கத்தை வழங்குகிறது) மாநில அளவிலும் (டெலாவேர், சவுத் டகோட்டா போன்ற மாநிலங்கள்) கமுக்கப் போலி நிறுவனங்கள், அறக்கட்டளைகளைக் கொண்டுள்ளன.

நான்காவது குழுவில் ஆசியப் புகலிடங்கள் உள்ளன, குறிப்பாக ஹாங்காங், சிங்கப்பூர், மக்காவ், மொரிஷியஸ். இவற்றுக்கு அப்பால், துபாய், பனாமா, சீஷெல்ஸ், குக் தீவுகள் ஆகியவையும் இதில் அடங்கும்.

வரிப் புகலிடங்களால் நாடுகள் இழக்கும் மொத்த வரி இழப்புகளில் பாதிக்கும் மேலானதற்கும் காரணமான நான்கு நாடுகளை "வரி ஏய்ப்பின் அச்சு" என்பர். அவை: இங்கிலாந்து, இலக்சம்பர்க், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து. 2020ஆம் ஆண்டில் பொருளாதார ஒத்துழைப்பு, வளர்ச்சிக்கான அமைப்பின் (OECD) தரவுகளின் பகுப்பாய்வு, வரி ஏய்ப்பு அச்சு நாடுகளால் ஒவ்வொரு ஆண்டும் மொத்தமாக $237 பில்லியன் வரிவருவாய் இழக்கப்படுகிறது எனக் காட்டுகிறது.

Source: Tax Justice Network

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

# ஐக்கிய முடியரசின் சிலந்தி வலை

சமந்தா




ஐக்கிய முடியரசின் சிலந்தி வலை என்பது ஐக்கிய முடியரசு, அதன் வெளிநாட்டுப் பிரதேசங்கள், முடிசார் நாடுகள் ஆகியவை பெருநிறுவன வரி மோசடி, தனியார் வரி ஏய்ப்பு ஆகியவற்றை செயல்படுத்தும் வரிப் புகலிடங்களின் வலையாக செயல்படும் விதத்தைக் குறிக்கிறது. வலையின் மையத்தில் லண்டன் நகரம் உள்ளது, இது ஐக்கிய முடியரசின் தலைநகரான லண்டனைக் குறிக்கவில்லை லண்டன் நகரத்துக்குள் உள்ள மற்றொரு லண்டனைக் குறிக்கிறது அதாவது லண்டனுக்குள் லண்டனை குறிப்பிடுகிறது.

உலகின் பெரும் பணம் இலண்டனுக்கு ஏன் செல்கிறது என்பதைப் புரிந்துகொள்ள நீங்கள்

நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும், மிகவும் விசித்திரமான, பழமையான, அதிகம் அறியப்படாத உலக நிதியத்தின் மிக முக்கியமான நிறுவனங்களில் ஒன்று: இலண்டன் கார்ப்பரேஷன் நகரம் (the City of London Corporation) என்கிறார் நிகோலஸ் ஷாக்ஸ்டன்.

இலண்டன் கார்ப்பரேஷன் நகரம் தனக்கான சொந்த அரசியலமைப்பையும், தனி மேயரையும் கொண்டுள்ளது. 1066இல் நர்மாண்டியின் கோமகன் வில்லியம் தலைமையிலான படையால் இலண்டன் இராணுவ ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது நிகழ்வு நார்மன் வெற்றி என அழைக்கப்படுகிறது. இந்த நார்மன் வெற்றிக்கு முன்னர் குடிமக்கள் அனுபவித்த பழங்கால உரிமைகள், சலுகைகளில் வேரூன்றியுள்ளது இலண்டன் கார்ப்பரேஷன் நகரம்.

இந்த இலண்டன் கார்ப்பரேஷன் நகர மேயரின் முக்கிய அலுவலகப் பணியை அவரது இணையத்தளம் இவ்வாறு கூறுகிறது: ஐக்கிய முடியரசு- அடிப்படையிலான அனைத்து நிதி, தொழில்முறை சேவைகளுக்கான தூதராக." அவர் பிரஸ்ஸல்ஸ், சீனா மற்றும் இந்தியா போன்ற இடங்களின் தொலைதூர அலுவலகங்களில் தாராளமயத்தைப் பரப்புரை செய்கிறார். சிட்டி கார்ப்பரேஷன், அதனுடன் நெருக்கமாக இணைக்கப்பட்ட சிந்தனைக் குழுக்கள், நிதித்துறையின் மீதான வரிகளையும், ஒழுங்குமுறைகளையும் ஏன் குறைக்க வேண்டும் என்பதை விளக்கி எக்கச்சக்கமான வெளியீடுகளை வெளியிடுகின்றன. லண்டன் கார்ப்பரேஷன் நகரம் அதன் சொந்த அதிகாரப்பூர்வ பரப்புரையாளரையும் கொண்டுள்ளது, அவர் 'ரிமெம்பரன்சர்' என்று அழைக்கப்படுகிறார். லண்டன் நகரில் உள்ள பொதுப் பிரதிநிதிகள் சபையின், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரே ஒருவர் லண்டன் கார்ப்பரேஷன் நகரின் 'ரிமெம்பரன்சர்' தான். பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் நிரந்தரமாக குடிகொண்டுள்ள இவர் ஊழல் மிக்க நிதித்துறையின் நலன்களை காக்கும் பிரதிநிதியாக செயல்படுகிறார். தற்போது 'ரிமெம்பரன்சராக' பால் டபுள் லண்டன் உள்ளார். கார்ப்பரேஷன் நகர உள்ளாட்சித் தேர்தல்கள் பிரிட்டனில் உள்ள மற்ற தேர்தல்களைப் போல இருப்பதில்லை. இங்கு வாழும் 7400 மனிதர்களுடன், இணைந்து அவர்களை விட அதிக எண்ணிக்கையில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களும் தேர்தலில் வாக்களிக்கின்றன.

பல நூற்றாண்டுகளாக இந்நகரம் செழித்தோங்கியுள்ளது, அரசாங்கங்கள், மன்னர்களுக்கு தேவைப்படும்போது கடன் கொடுக்க அதனிடம் பணம் உள்ளது. எனவே நகரத்திற்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன, இதுவே பிரிட்டிஷ் தேசிய அரசை மாற்றிய வரலாற்றின் அலைகளைத் தாங்கும் ஒரு அரசியல் கோட்டையாக இருக்க அதை அனுமதிக்கிறது. கேள்வியில்லாது வெளிநாட்டுப் பணத்தை வரவேற்கும் பிரிட்டிஷ் பாரம்பரியத்தை இது வளர்த்து வருகிறது, மேலும் பல நூற்றாண்டுகளாக உலகின் பணக்கார குடிமக்களை ஈர்த்துள்ளது.

1950களின் இடைப்பகுதியில் பிரிட்டிஷ் பேரரசு சிதைந்தபோது, தளர்வான கட்டுப்பாடு மற்றும் தளர்வான அமலாக்கம் மூலம் உலகின் சூடான பணத்தை கவர்ந்திழுக்கும் புதிய மாதிரியாக லண்டன் மாறியது. உள்நாட்டில் நம்பகமான பிரிட்டிஷ் சட்ட அடித்தளத்தையும் உள்நாட்டு விதிகள், சட்டங்களை கடுமையாக நிலைநிறுத்துகிறது, அதே நேரத்தில் வெளிநாட்டு சட்டத்தை மீறுவதை கண்மூடித்தனமாக அனுமதித்தது. வெளிநாட்டு நிதியாளர்களிடம், "உங்கள் பணத்தை நாங்கள் திருட மாட்டோம், ஆனால் நீங்கள் மற்றவர்களின் பணத்தை திருடினால் நாங்கள் வம்பு செய்ய மாட்டோம்" என்று சொல்லும் ஒரு உன்னதமான நாடுகடந்த வரி-புகலிடமாக இருந்து வருகிறது.

பிரிட்டன் விரும்பினால் இந்த வரி-புகலிட கமுக்கத்தை ஒரே இரவில் மூடலாம், ஆனால் லண்டன் நகரம் அதை அனுமதிக்காது. லண்டனில் உள்ள ‘சிட்டி யுனிவர்சிட்டியின்’ சர்வதேச அரசியல் பொருளாதாரத்தின் பேராசிரியரான ரோனென் பலன் விளக்குகிறார், " நாம் இதை வெளிப்படையாக சொல்ல வேண்டும். இன்று உலக நிதிச் சந்தைகளின் மையமாக இரண்டாவது பிரிட்டிஷ் பேரரசு உள்ளது. பிரிட்டன் மிக சிறப்பாக அதன் நிலையை விளம்பரப்படுத்தாமல் உள்ளது."

வெளிநாட்டுப் பிரதேசங்கள் மற்றும் முடிசார் நாடுகள் வழியாக சட்டவிரோதமாக பணம் இந்த லண்டனுக்கு அனுப்பப்படுகிறது. இங்கிலாந்தின் கடல்கடந்த பிரதேசங்கள் மற்றும் முடி சார் நாடுகள் பெரும்பாலும் லாபத்தையும், சட்டவிரோதமாக நிதிகளை கடத்துவதற்கு துணைக்கோள்களாக துணைபுரியும் ஆட்சிப் பிரதேசங்களாகும். உலகளாவிய பணப் பாய்ச்சல் வலையின் முனைகள் போல இந்த ஆட்சிப் பிரதேசங்கள் செயல்படுகின்றன, அதன் மையத்தில்

லண்டன் நகரம் உள்ளது, அங்கு பன்னாட்டு நிறுவனங்களும் தனிநபர்களும் தங்கள் இலாபங்களையும் செல்வத்தையும் துணைக்கோள்களாக செயல்படும் ஆட்சிப் பிரதேசங்கள் வழியாக மடைமாற்றம் செய்து கடத்துகின்றன. இது வரி மோசடி செய்பவர்கள், அவர்கள் செலுத்த வேண்டியதை விட குறைவான வரியைச் செலுத்துவதற்காக, உலகில் வேறு இடங்களில் உள்ள தங்கள் இலாபங்கள் மற்றும் செல்வத்தின் உண்மையான மதிப்பைக் குறைத்து மதிப்பிட அனுமதிக்கிறது.

ஐக்கிய முடியரசு, அதன் வெளிநாட்டுப் பிரதேசங்கள் மற்றும் முடி சார் நாடுகளை சேர்த்த வலையமைப்பானது, உலகளாவிய வரி மோசடிக்கு மிகவும் முதன்மையான பங்கு வகிக்கிறது. வரி நீதிக்கான வலையமைப்பின் பெருநிறுவன வரி புகலிடக் குறியீடு 2019ன் அடிப்படையிலான தரவரிசையில், பெருநிறுவன, தனியார் வரி மோசடியால் உலகளவில் ஏற்படும் மொத்த வரி இழப்புகளில் மூன்றில் ஒரு பங்கிற்கு ஐக்கிய முடியரசின் சிலந்தி வலையே காரணம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வெளிநாட்டுப் பிரதேசங்கள் மற்றும் முடி சார் நாடுகளை கட்டுப்படுத்துவதற்கும், சட்டங்களை தடை செய்வதற்குமான முழு அதிகாரங்களை ஐக்கிய முடியரசு கொண்டுள்ளது, மேலும் இந்த வெளிநாட்டுப் பிரதேசங்கள் மற்றும் முடி சார்நாடுகளில் முக்கிய அரசு அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் பிரிட்டிஷ் அரசிடம் உள்ளது. இவற்றிற்கிடையேயான புவியியல், அரசியல் தூரமானது, உலகெங்கிலும் உள்ள சில மோசமான நிதி கமுக்கத்தையும், பெருநிறுவன வரி மோசடியையும் பாசாங்குத்தனமாக செயல்படுத்த ஐக்கிய முடியரசை அனுமதிக்கிறது, அதே நேரத்தில் தன் நாட்டில் மேன்மையான வரியமைப்பையும், வெளிப்படைத்தன்மை தரத்தையும் பராமரிக்கிறது.

ஐக்கிய முடியரசின் சிலந்தி வலை பற்றிய கூடுதல் தகவலுக்கு, மைக்கேல் ஆஸ்வால்டின் முக்கிய ஆவணப்படமான "The Spider's Web: Britain's Second Empire", YouTube இல் பார்க்கவும் வரி நீதிக்கான வலையமைப்பின் நிறுவனர் ஜான் கிறிஸ்டென்சன் இதன் இணை தயாரிப்பாளர்,.

https://youtu.be/np_ylvc8Zj8

Source: Tax Justice Network

# நிதிக் கமுக்கம்

**சமந்தா**

நிதிக் கமுக்கம் என்பது பணக்காரத் தனிநபர்கள், பன்னாட்டு நிறுவனங்கள், குற்றவாளிகள் ஆகியோர் தங்கள் சொத்துக்களுக்கு வரி கட்டாமல் மோசடி செய்யவும், சட்டத்தின் ஆளுகையிலிருந்து தப்பித்துக் கொள்ளவும், சிக்கலான நிதி வழிமுறைகளைப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. நிதிக் கமுக்கமானது வரி மோசடியைச் சாத்தியமாக்குகிறது, போதைப் பொருள் விற்பனையையும், மனிதக் கடத்தலையும் இலாபகரமாக்குகிறது.

நிதிக் கமுக்கமானது சட்டபூர்வக் கமுக்கத் தன்மையிலிருந்து வேறுபட்டது. ஒரு வங்கி உங்கள் கணக்கு விவரங்களை இணையதளத்தில் வெளியிடாது, அதே போல் ஒரு மருத்துவர் அறுவை சிகிச்சை அறையின் கதவில் உங்கள் நோய்களின் விவரங்களைத் தொங்கவிட மாட்டார். ஆனால் நிதி கமுக்கம் என்பது, தொடர்புடைய தகவல்களைச் சேகரிக்க மறுப்பதையும், அல்லது தேவைப்படும் போது சட்ட அதிகாரிகள், அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ள --- எடுத்துக்காட்டாக, ஒரு நபர் முறையாக வரி கட்டுகிறாரா அல்லது சட்டத்திற்குக் கட்டுப்படுகிறாரா என்பதை உறுதிப்படுத்த --- மறுப்பதையும் குறிப்பிடுகிறது.

தீங்கு விளைவிக்கும் நிதிக் கமுக்கம் வெவ்வேறு "சுவைகளில்" வருகிறது. மிகவும் பிரபலமான சுவையானது வெனிலா சுவிஸ்-பாணி வங்கிக் கமுக்கம் ஆகும், அங்கு வங்கியாளர்கள் வாடிக்கையாளரின் கமுக்கங்களைக் கல்லறைக்கு எடுத்துச் செல்வதாக உறுதியளிக்கிறார்கள்.

இரண்டாவது சுவையானது ஆட்சிப் பிரதேசங்களில் அறக்கட்டளைகள், பெருநிறுவனங்கள், அமைப்புகள், போலி நிறுவனங்கள் போன்ற ஏற்பாடுகளை உருவாக்க அனுமதித்து - அதன் உடைமையாளர் பற்றிய தகவல்கள், செயல்பாடு, அதன் நோக்கம் ஆகியவற்றைக் கமுக்கமாக வைத்திருக்கவும், சட்டப்பூர்வ உடைமையாளர் தகவல்களை குழப்படியாக்கவும் உதவுகிறது. இந்தக் கட்டமைப்புகள் --- எடுத்துக்காட்டாக, சுவிஸ் வங்கிக் கணக்கு, மத்திய இலண்டனில் குடியிருப்புச் சொத்து, மொனாக்கோவில் ஒரு பந்தயக் குதிரை,

எஸ்&பி 500 நிறுவனத்தில் பங்குகள் அல்லது கப்பல் - -- போன்ற சொத்துக்களை வைத்திருக்கலாம் ஆனால் அந்த சொத்துக்களை யார் அனுபவிக்கிறார்கள் அதன் வருவாய் யாரைச் சேர்கிறது போன்ற தகவல்களைக் கண்டறிவதை கடினமாக்குவதற்கும், கமுக்கமாக வைத்திருக்கவும் ஆவன செய்யப்படுகிறது.

கமுக்கத்தின் மூன்றாவது சுவையானது, நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் தகவல் பரிமாற்றத்திற்குத் தடைகளை ஏற்படுத்தும் சரகங்களைக் குறிப்பிடுகிறது. உள்நாட்டில் கிடைக்கும் தகவல்களைப் பின்தொடர்வதற்கும் சேகரிப்பதற்கும் வேண்டுமென்றே மறுப்பதன் மூலம் இது செய்யப்படலாம். மற்றச் சரகங்களுடனான பிழையாத் தகவல் பரிமாற்ற ஒப்பந்தங்கள் கூட பரிமாற்றம் செய்ய முதலில் தகவல் கிடைக்கவில்லை என்றால் பயனற்றவையே.

நிதிக் கமுக்கமானது மற்ற ஆட்சிப் பகுதிகளுடன் தகவலைப் பகிர்ந்து கொள்ள விரும்பாததன் மூலமும் செயல்படலாம் --- தகவலுக்கான கோரிக்கையை மறுப்பதன் மூலம், அல்லது அதிகாரப்பூர்வமாகவோ, பிற வழிகளிலோ தகவல் பரிமாற்றத்திற்குத் தடைகளை ஏற்படுத்துவதன் மூலம் பல சரகங்க்ள் தங்கள் சொந்தச் சட்டங்களிலும் வேண்டுமென்றே இணக்கமில்லாத தொழில்வணிக மாதிரியை உருவாக்குகின்றன.

இந்தச் சுவைகள் அனைத்தும் அமைப்பாக்கப்பட்ட குற்றம், மோசடி, திருட்டு, அரசாங்க வளங்களைத் திசைதிருப்பல், சட்டவிரோத மரம் வெட்டுதல், இலஞ்சம், சட்டவிரோத வைரங்களைப் பெறுதல், வரி ஏய்ப்பு போன்ற பலவற்றை எளிதாக்கும் திறன் கொண்டவை. வரி நீதிக்கான வலையமைப்பு உருவாக்கிய நிதி கமுக்கக் குறியீடு, கமுக்கச் சரகங்களின் நாடுகடந்த அமைப்பு பற்றி மிக விரிவான கண்ணோட்டத்தை வழங்குகிறது.

தனிநபர்கள் தங்கள் செல்வம், நிதி விவகாரங்களை சட்டத்தின் ஆட்சியிலிருந்து மறைக்க உதவும் ஒரு வரி புகலிடமே கமுக்க ஆட்சிப் பிரதேசம் என அழைக்கப்படுகிறது, இது குறைவான வரி செலுத்துவதற்கு மட்டுமல்லாது, பணமோசடி, பயங்கரவாத குழுக்களுக்கு நிதியுதவி போன்ற பிற நிதிக் குற்றங்களுக்கும் துணை போகிறது.

**நிதிக் கமுக்கம் மோசமானதா?**

நிதிக் கமுக்கம் மோசமானது, ஏனெனில் இது டிரில்லியன் கணக்கான சொத்துக்கள் மற்றும் சொத்துக்களை சட்டத்தின் ஆட்சிக்கு அப்பால் செயல்பட அனுமதிக்கிறது. நிதி கமுக்கமானது வரி மோசடியை சாத்தியமாக்குகிறது, போதைப்பொருள் விற்பனையாளர்கள் வங்கி மற்றும் மனித கடத்தல் லாபகரமானது. சட்டத்தை மதிக்கும் வரி செலுத்துவோரின் இழப்பில் செல்வந்தர்கள் செல்வத்தை குவிக்க இது அனுமதிக்கிறது, இதன் மூலம் செல்வந்தர்களும், பன்னாட்டு நிறுவனங்களும் கொள்கைகள், கொள்கை வகுப்பாளர்களிடம் தேவையற்ற செல்வாக்கை பெற அனுமதிக்கிறது.

உலகம் முழுவதும் உள்ள US$21 முதல் $32 டிரில்லியன் தனியார் நிதிச் செல்வம், கமுக்க ஆட்சிப் பிரதேசங்களில், வரி விதிக்கப்படாமல் அல்லது குறைந்த வரியுடன் பாதுகாக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**அறக்கட்டளைகள் எவ்வாறு செயல்படுகின்றன?**

செல்வத்தின் உரிமையாளர்களின் அடையாளத்தை வெளியே தெரியாமல் கமுக்கமாகப் பாதுகாக்கவும், குறைந்த வரி செலுத்தும் நோக்கத்திற்காகவும், சட்டத்தின் ஆளுகையில் இருந்து தப்பிக்கவும் சொத்துரிமையின் நிலையைக் குழப்பவும் அறக்கட்டளைகள் தவறாகப் பயன்படுத்தப்படலாம். நவீன உலகளாவிய நிதியமைப்பில் பயன்படுத்தப்படும் மிக முக்கியமான வழிமுறைகளில் ஒன்றாக அறக்கட்டளைகள் உள்ளன.

அறக்கட்டளைகள் பெரும்பாலும் ஒரு தனிநபரின் செல்வத்தை அவரே அதை செய்ய முடியாத சூழ்நிலைகளில் பிறருக்கு மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன, உதாரணமாக பெற்றோர் மரணத்திற்குப் பிறகு தங்கள் செல்வத்தை ஒரு அறக்கட்டளையில் சேமித்து வைக்கலாம், அது குழந்தைக்கு மாதாந்திர வருவாய் கிடைக்கச் செய்கிறது. குழந்தை பெரியவராகும் போது, பெற்றோர் தமக்காக விட்டுச் சென்ற அறக்கட்டளையின் மூலம் வைத்திருக்கும் அனைத்துப் பணம் மற்றும் சொத்துகளுக்கும் உரிமையாளராக முடியும். ஒரு பணக்காரத் தொழில்முனைவோர், தொண்டு நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்காக

அர்ப்பணிக்கப்பட்ட ஒரு அறக்கட்டளைக்கு தங்கள் செல்வத்தை விட்டுவிடலாம். எவ்வாறாயினும், வரி மோசடி செய்பவர்கள் தங்கள் செல்வத்தை மறைக்கப் பயன்படுத்தும் வழிகளை அரசாங்கங்கள் பெருகிய முறையில் கட்டுப்படுத்துவதால், அறக்கட்டளைகள் வரி மோசடி செய்வதற்கும் நிதிக் குற்றங்களைச் செய்வதற்கும் அதிகளவில் திறன் பெற்றுவருகின்றன.

செல்வம் மற்றும் சொத்துகளின் உரிமையைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அறக்கட்டளைகள் இடமளிக்கின்றன. அறக்கட்டளை வைத்திருக்கும் செல்வம், அதன் உண்மையான உரிமையாளருக்கோ, அல்லது அறக்கட்டளையிலிருந்து இப்போதோ அல்லது எதிர்காலத்திலோ நன்மைகளைப் பெறும் பயனாளிக்கோ அல்லது அறக்கட்டளைச் செல்வத்தின் முழு கட்டுப்பாட்டையும் பயனாளி ஏற்றுக் கொள்ளும் வரை அவர் சார்பாகச் செல்வத்தை நிர்வகிக்கும் நபருக்கோ சொந்தமானது அல்ல. வரி மோசடி செய்பவர்கள் தங்களின் பெருமளவு சொத்துகள், மாளிகைகள், நிறுவனங்கள், விலையுயர்ந்த சொத்துக்களிலிருந்து பெரும் பணம், பயன்பாடுகள் மீது முழுக் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் போதும் அவர்களின் சொத்துகளின் உரிமையை மறைக்க அறக்கட்டளைகள் வழங்கும் இந்த இடைநிறுத்தப்பட்ட உரிமைநிலையைப் பயன்படுத்துகின்றனர்.

உதாரணமாக, உரிமையாளர் சொத்திலிருந்து பிரிக்கப்பட்டிருந்தாலும், அவர் ஒரு கமுக்க "விருப்பக் கடிதம்" மூலம் சொத்தின் மீது கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொள்ளலாம். உரிமையாளர் ஒரு அறக்கட்டளைக்கு மாளிகையின் உரிமையை வழங்கலாம், ஆனால் பயனாளிகளுடன் தொடர்ந்து அதில் வசிக்கலாம். உரிமையாளர் ஒரு பெருந் தொகையை அறக்கட்டளையில் வைக்கலாம், அதன் மூலம் அறக்கட்டளை பின்னர் அவர்களுக்கு ஒருபோதும் திருப்பிச் செலுத்தப்படாத கடனைக் கொடுக்கும் படி பணத்தைத் திரும்பப் பெறலாம். வரிப் புகலிடங்கள் இந்த வகையான சிக்கலான தகாவழிச் சூழ்ச்சிகளை எளிதாக்கும் நிபுணத்துவம் பெற்றுள்ளன. இவ்வகையான கையாளுதலில் சிறப்பாகச் செயல்படும் வளைக்கத்தக்க அறக்கட்டளைகள், குறிப்பாக நாடுகடந்த அறக்கட்டளைகளின் பொதுவான வகைகளாகும், மேலும் அவை மட்டுமே "உரிமையில்லாமல்" உள்ள டிரில்லியன் கணக்கான டாலர்கள் மதிப்புள்ள சொத்துக்களுக்கு பொறுப்பாகும். நிறுவனங்களைப் பதிவு செய்வது போல,

பயனீட்டாளர்களைப் பதிவு செய்ய அறக்கட்டளைகளை அரசாங்கங்கள் கட்டாயப்படுத்த வேண்டும்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

# வரிப் புகலிடங்கள் ஊழலை எவ்வாறு தூண்டுகின்றன?

**சமந்தா**

ஊழலை எளிதாக்குவதில் வரிப் புகலிடங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நாடுகடந்த நிதியமைப்பின் வளர்ச்சி அதோடு தொடர்புடைய ஊழல் கேடுகளைக் கொண்டுவந்துள்ளது. வரி ஏய்ப்பு மற்றும் மோசடி செய்ய விரும்புபவர்களால் உருவாக்கப்பட்ட அதே அமைப்புகள், வழிமுறைகளை ஊழல் நடைமுறைகள் பயன்படுத்துகின்றன.

ஊழலை எளிதாக்குவதில். கணக்காளர்கள், வழக்கறிஞர்கள், பிற நிதி இடைத்தரகர்களின் பங்கு ஆய்வுகளை அடிக்கடி தவிர்ப்பதே ஆகும். நிதி கமுக்க சட்டங்கள், கொள்கைகள், கமுக்க ஆட்சிப் பிரதேசங்களின் பரந்த வலையமைப்பு ஆகியவை ஊழலைத் தடுக்காமல், மேலும் மோசமாக்குவதில் பங்கு வகுக்கின்றன. மனிதக் கடத்தல், ஊழல் தொடர்புடைய குற்றங்கள் கமுக்கத்தின் மூலமே வளர்ந்த பரவலான மனித அத்துமீறல்களையும், துயரத்தையும் உருவாக்குகிறது. கடத்தல்காரர்களின் இலக்குகளாக பெண்களும் சிறுமிகளும் அதிக விகிதாசாரத்தில் பாதிக்கப்படுகின்றனர். பெருநிறுவன சக்தியும்; அரசாங்கங்களும்; வரிக் கொள்கை, கமுக்கச் சட்டங்களின் வடிவமைப்பு, வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தி தேவையான சீர்திருத்தங்களை எதிர்க்கும், அரசுகளுக்கு இடையேயான அமைப்புகளும், ஊழலை நிலைநிறுத்துவதில் உடந்தையாக உள்ளன.

நிதிக் கமுக்கம் இல்லாமல் ஊழல் செய்ய முடியாது. நிதிக் கமுக்கத்தின் மையமாக நாடுகடந்த வரிப்புகலிடங்கள் செயல்படுகின்றன.

கருப்புப் பணம் பெருமளவில் வெளியேறுவதால் உண்மையில் பாதிக்கப்பட்டவை

நைஜீரியா, பங்களாதேஷ் போன்ற உலகின் "மிகவும் ஊழல் நிறைந்த" நாடுகளா? அல்லது சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, லக்சம்பர்க், அமெரிக்கா போன்ற அனைத்துக் கொள்ளைகளையும் கையாளும் நாடுகளா?

ஊழலின் பாரம்பரிய வரையறைகள் மிகவும் குறுகியவை. உலக வங்கி அல்லது சர்வதேச வெளிப்படைத்தன்மைக்கான நிறுவனங்கள் ஊழலற்ற நாடுகள் மற்றும் தொழில்துறைகளின் குறியீடுகளை உருவாக்கியுள்ளன, அவை பொதுவாக ஏழை ஆப்பிரிக்க நாடுகளை 'மிகவும் ஊழல் நிறைந்தவை' என்று அடையாளம் காட்டுகின்றன, அதே நேரத்தில் மூலதனம் பறக்கவும், பெரும் கொள்ளை, லஞ்சம், வரி ஏய்ப்பு வரி மோசடிகளையும் எளிதாக்குவதில் வரிபுகலிடங்களில் உள்ள நிதி அமைப்பின் பங்கைப் புறக்கணிக்கின்றன. நைஜீரியர்களிடம் உலகின் மிகவும் ஊழல் நிறைந்த நாடுகளில் ஒன்றாகத் உங்கள் நாடும் உள்ளது என்று கூறுவது அவர்களுக்கு அதிகம் உதவுவதில்லை. அவர்கள் தங்களுடைய பணம் எங்கே போனது என்று தெரிந்து கொள்வதில் தான் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

மில்லியன் டாலர்களை ஒரு சூட்கேஸில் அடைத்து நாடுகடந்து செல்வதெல்லாம் பழையகாலம், நவீன வங்கியில் திருடப்படக்கூடிய தொகைகளுக்கு வரம்பு இல்லை. ஆனால் நிதி கமுக்கம் இல்லாமல் அங்கு ஊழல் செய்யமுடியாது; வரி புகலிடங்களும் கமுக்க ஆட்சிப் பிரதேசங்களும் அவற்றின் மையத்தில் உள்ளன.

வரி நீதிக்கான வலையமைப்பு வெளியிடும் நிதி கமுக்கக் குறியீடு இதன் மறுபக்கத்தைக் காட்டுகிறது. இந்த குறியீட்டின் மூலம் அடையாளம் காணப்படும் மிக முக்கியமான கறுப்புப் பண மையங்கள் மிகவும் பாரம்பரியமான குறியீடுகளில் 'சுத்தமானது' என்று தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஊழல் என்பது பொதுநலனை ஊக்குவிக்கும் விதிகள், அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் ஒருமைப்பாட்டைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது, மேலும் அந்த விதிகளின் மீதான நம்பிக்கையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. ஊழல் என்பது ஓர் அமைப்பு ரீதியான பிரச்சனை. ஆனால் சர்வதேச வெளிப்படைத் தன்மைக்கான அமைப்பு

(Transparency International) ஊழலுக்குத் "தனிப்பட்ட ஆதாயத்திற்காக அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துதல்" என்றும், உலக வங்கி "தனிப்பட்ட இலாபத்திற்காக பொதுப் பதவியை தவறாகப் பயன்படுத்துதல்" என்றும் வரையறை செய்து ஊழல் என்பதன் வரையறையைக் குறுக்கியுள்ளன. இத்தகைய வரையறை அமைப்பு அடிப்படையில் இல்லாமல் தனிநபர்களின் பரிவர்த்தனைகளிலேயே அதிகக் கவனம் செலுத்துவதை ஊக்குவிக்கிறது. ஊழலால் முழுச் சமூகமும் சிதைந்து விடும். உண்மையில், நாடுகடந்த நடவடிக்கைகளால் உலக நிதி அமைப்பு முழுவதும் சீர்கெட்டுள்ளது.

இருப்பினும், இந்த மறுபக்கம் குறித்த விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது. 2020ஆம் ஆண்டில், சர்வதேச வெளிப்படைத் தன்மைக்கான அமைப்பு, உலகளாவிய ஊழலைப் பற்றிய முழுச் சித்திரத்தைப் பெற, நிதிக் கமுக்கக் குறியீட்டை அவர்களின் ஊழல் புலனாய்வுக் குறியீட்டுடன் ஒப்பிடுவதற்கு கவனம் செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

பலர் ஊழலை இலஞ்சத்துடன் நெருக்கமாகத் தொடர்புபடுத்துகிறார்கள், ஆனால் அதன் அமைப்புவழித் தன்மை ஊழலை மிகப் பெரிய பிரச்சனையாக்குகிறது. ரேமண்ட் பேக்கர் ”இலஞ்சம் என்பது எல்லைதாண்டிய சட்டவிரோத ஊழல் பாய்ச்சல்களில் வெறும் மூன்று விழுக்காடு மட்டுமே” என்கிறார். ஊழலின் பாரம்பரிய வரையறைகள் தனியார் துறையைப் புறக்கணிக்கும் அதே வேளையில், பொதுத் துறையில் அதிகக் கவனம் செலுத்துவதை ஊக்குவிக்கின்றன. சந்தை மோசடி போன்ற சட்டவிரோதமான அல்லது முறைகேடான நிதிச் செயல்பாடுகள் என நாம் அடையாளம் காணும் பெரும்பாலானவை தனியார் துறையில் கமுக்கமாகப் பாதுகாக்கப்படுகிற ஊழல் நடத்தைகளைக் குறிக்கின்றன. பொதுவாக. இந்த ஊழல் ஓட்டங்களை வரவேற்று, எளிதாக்கி, தீவிரமாக ஊக்குவிக்கும் வெளிநாட்டு வங்கியாளர்கள், வழக்கறிஞர்கள், கணக்காளர்களின் "நுட்பமான உள்கட்டமைப்பு" ஊழல் பிரச்சனையின் மையப் பகுதியாகும்.

**ஊழலின் சிறந்த வரையறை:**

"ஊழல் என்பது பொதுநலனை மோசடி செய்வது மற்றும் பொதுநலனை ஊக்குவிக்கும் விதிகள், அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் நேர்மையின் மீதான பொது நம்பிக்கையைக்

குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகும்."

வரி நீதிக்கான வலையமைப்பின் முன்னாள் தலைவர் ஜான் கிறிஸ்டென்சன், கிரீஸின் ஊழல் கதையை "Grace's corruption story" என்ற பெயரில் அம்பலப்படுத்திய காணொளி நாடுகடந்த வரிப் புகலிடங்கள் ஊழலை எவ்வாறு ஊக்குவிக்கின்றன என்பதை விளக்குகிறது: https://youtu.be/autlpiy2kE8

ஜிம்பாப்வே பத்திரிக்கையாளர் ஸ்டான்லி குவெண்டா அல் ஜசீரா பத்திரிகைக்காக மேற்கொண்ட "ஆப்பிரிக்காவை எப்படிக் கொள்ளையடிப்பது"-"How to Rob Africa" என்ற விசாரணையை நீங்கள் பார்க்க வேண்டும்: https://youtu.be/VVN3N3mWa2E